பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

துரித தபால் பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்,பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 04 | ஞாயிற்றுக்கிழமை | (18-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 30

# யுத்த விமானங்கள், கப்பல்கள்

# இந்தியாவிடம் கொள்வனவு

## இலங்கை அரசு முடிவு

(புதுடில்லி)

**இலங்கை இந்தியப் பாதுகாப்பு உடன்படிக்கைக்கு அமைவாக, இந்தியாவிடமிருந்து இராணுவ ஹெலிகொப்டர்கள், யுத்த விமானங்கள் மற்றும் யுத்தக் கப்பல்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக இந்திய இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்தியப் பாதுகாப்பு உடன்படிக்கைக்கு அமைவாக இந்தியாவிலிருந்து இலங்கையின் பாதுகாப்புக்கு அவசியமான ஆயுத உபகரணங்கள் மற்றும் ஆயுதப்படைப் பயிற்சி, உளவுத்துறைச் சேவைகள் என்பவற்றை இந்திய அரசு இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் ஆபத்தில்லாத ஆயுதப் பரிமாற்றவகையில் இராணுவக் ஹெலிகொப்டர்கள், யுத்த விமானங்கள் மற்றும் யுத்தக் கப்பல்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத் மற்றும் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல ஆகியோர் இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுக்களை அடுத்து பாதுகாப்பு உடன்படிக்கைக்கான (12ஆம் பக்கம் பார்கக)

## மத வன்முறைகளுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்குக

### பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

கிறிஸ்தவ மதத்தலங்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். உள்துறை அமைச்சிற்குப் பொறுப்பான ஜனாதிபதி, இத்தகைய தாக்குதல்கள் பற்றி விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிற்கு பணித்துள்ளார்.வன்முறைச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களைக் கைது செய்வதற்கு எத்தகைய சலுகையும் காட்டத் தேவையில்லை என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் உறுதியாகக் கடைப்பிடிப்பவர்கள் மரியாதைக் குறைவாக மககளின் சமய, சமூக நிலைப்பாட்டை அவமதிக்கும் இத்தகைய சம்பவங்களை அனுமதிக்க முடியாதென பொது ஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார். கடந்த வியாழனன்று இறுதியாக ஒரு கிறிஸ்தவ தேவாலயம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு முன்னரும் கடந்த மாதம் நாட்டின் பல இடங்களில் கிறிஸ்தவ வழிபாட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டுமென சில பௌத்த குழுவினர் தீவிரமாகவுள்ளனர். சில கிறிஸ்தவ மதப் பிரிவினர் நாட்டில் வறிய மக்களுக்கு (12ஆம் பக்கம் பார்கக)

## பொங்கு தமிழ் 3ம் ஆண்டு நினைவு யாழ்.பல்கலையில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக சமூகத்தால் அனுஷ்டிக்கப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் 3ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.பகீரதன் தலைமையில் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், அருட்தந்தை இமானுவேல் மற்றும் மாவீரர் லெப்.ஜிம்றோசின் தாயார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ்மாவட்ட அரசியல் துறை துணை பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைக்க பொங்கு தமிழ்ச் சுடரை சர்வதேச மாணவர் பேரவையைச் சேர்ந்த எஸ்.கண்ணன் ஏற்றிவைத்தார்.

யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ, விரிவுரையாளர்களான ரி.கணேசலிங்கம், எஸ்.சிதம்பரநாதன் மற்றும் அருட்தந்தை இம்மானுவேல், சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (இ-3)

## ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006ம் ஆண்டே முடிவடையும்

### சந்தேகம் இல்லை என்கிறார் அமுனுகம

(கொழும்பு)

ஜனாதிபதி இரண்டாவது தடவையாக இரகசியப் பதவிப்பிரமாணம் செய்த விடயம் பற்றி மேல் நீதிமன்றத்திடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி சவால் விடுத்துள்ளது. ஜனாதிபதி 2006 ஆம் ஆண்டு வரை பதவியில் தொடர்வது பற்றி சந்தேகம் எதுவுமில்லை. இது பற்றி அரசாங்கத்திற்கு சந்தேகம் ஏதேனும் இருப்பின் உயர் நீதிமன்றை ஏன் நாடக்கூடாது. இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணி பேச்சாளர் சரத் அமுனுமக செய்தியாளர் மாநாட்டில், கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதிக்கு மக்கள் 2வது தடவையாகவும் ஆணை வழங்கியுள்ளார்கள். இதன்படி ஜனாதிபதி (12ஆம் பக்கம் பார்க்க)







பொங்கு தமிழ் 3ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் சில காட்சிகள். (படம்: [illegible])

# புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க அரசு முயற்சி செய்து வருகிறது

## பிரதமர் ரணில் உரை

(நமது நிருபர்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்ற வந்த சமாதான முயற்சிகளை தொய்ய விடாது அம்முயற்சிகளுக்கு உத்வேகத்தை அளிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்குரிய செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

ஐககிய தேசிய முன்னணி அரசின் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின் சமாதான முயற்சிகளின் வேகம் குறைந்து சமாதானப் பேச்சுக்களை யார் முன்னெடுத்துச் செல்வதென்ற கேள்வியெழுந்துள்ளது.

இந் நிலையில் சமாதான முன்னெடுப்பில் இருந்து வந்த நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.இதுவே சமாதான முயற்சிகளுக்கு முக்கிய தேவையாகவுமுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அர

(12ஆம் பக்கம் பார்கக)

## வாகனம் குடைசாய்ந்ததில் எம்.பி.அசீஸ் படுகாயம்

(அம்பாறை)

அம்பாறைக் கச்சேரியில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற பாராளுமன்ற உறுப்பினரின் வாகனம் குடைசாய்ந்ததில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.நேற்றுமுன்தினம் அம்பாறைக் கச்சேரியில் சுகாதார அமைச்சர் பி.தயாரெத்தின தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற அஸ்ரப் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.வி.ஏ.அசீஸின் வாகனமே குடை சாய்ந்தது. இதில் பாராளுமன்ற உறுப்பினர், அவரது மெய்ப் பாதுகாவலர், வாகன சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்து அம்பாறை

(12ஆம் பக்கம் பார்க்க)

# போராட்டத்திற்கான ஆளணியை கலைப்படைப்புகளே சேர்த்துத்தந்தன

## கலைபண்பாட்டுக்கழக மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

மகளிரைக்கொண்டு இசைக் குழு அமைக்கவேண்டும் என்ற சிந்தனைக்கு ஊக்கமும் உத்வேக மும் தந்தவர் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனே. இவ் வாறு தமிழீழக் கலைபண்பாட்டுக் கழக மகளிர் பிரிவுப் பொறுப் பாளர் அருண்நிலா தெரிவித் துள்ளார்.

தமிழீழ கலைபண்பாட்டுக் கழக மகளிர் பிரிவின் இசைக் குழு தொடர்பான பத்திரிகை யாளர் சந்திப்பு நேற்று யாழ். மாவட்ட அரசியல்துறை பணி மனையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசுகை யிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இசைக்குழுவின் முதலாவது அரங்கேற்றம், கடந்த ஆண்டு நடைபெற்ற லெப்.மாலதி நினைவு தினப் பரிசளிப்பு விழா வில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் எமது தலைவர் வே.பிரபாகரனும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

எமது கலைபண்பாட்டுக் கழகம் கடந்த காலங்களில் மேற்கொண்ட கலைப் படைபபுக்களே எமது போராட்டத்திற்கு பெருமளவு ஆளணியை சேர்த்துத் தந்திருக் கிறது. அத்துடன், தமிழர்களின் உணர்வை வெளி உலகுக்கு கொண்டுவந்த பெருமையும் அதற்கே உரியது என்றார்.

இச்சந்திப்பில் யாழ்மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி யும் கலந்துகொண்டார்.

(ந-3)

# ஜனாதிபதி – பிரதமர் முரண்பாடுகள் நாடு பிளவுறுவதற்கான முன்னேற்பாடு

## மனோகணேசன் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையிலான முரண்பாடு களை களையாதுவிட்டால் நாடு பிளவுபடுவதை எவராலும் தடுக்க இயலாது என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சமாதான முயற்சிகளிலிருந்து பிரதமர் தாம் விலகிக்கொள்வ தாக அறிவித்திருப்பது துரதிஷ் டவசமானது. இந்நிலைக்கு ஜனா திபதி நாட்டின் மூன்று அமைச் சுக்களையும் பொறுப்பேற்றமையே காரணம்.

இத்தகைய இனவாதிகளின் செயற்பாடுகளை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். எனவே, மக்க ளின் தொடர்ச்சியான அதிருப்திக்கு இலக்காகாது சமாதான முன்னெ டுப்புக்களைத் தொடர பிரதமர் ரணி லும் ஜனாதிபதி சந்திரிகாவும் ஒன்றுபட வேண்டும் எனவும் மனோகணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(உ-4)

# யப்பானின் பிரதிநிதி அகாஷி நாளை கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கான யப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி நாளை திங்கட்கிழமை இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் இலங்கைக்கு மேற் கொள்ளும் 6ஆவது விஜயம் இது வாகும். எதிர்வரும் 25ஆம் திகதி வரை இலங்கையில் தங்கி இருக் கும் இவரது முக்கிய குறிக்கோள் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து வைப்பதாகும்.

நாளைய தினமே அகாஷி கிளிநொச்சிக்குச் சென்று அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள் ளார்.

இவர் அங்கு வடக்குக் கிழக் குப் பகுதிகளில் மேற்கொள்ளப் படவேண்டிய அபிவிருத்தித் திட் டங்கள் குறித்து அறிந்துகொள்ள வுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெற வுள்ள இலங்கை மீள்புனரமைப்பு அபிவிருத்தி பற்றிய டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மகா நாட்டின் இரண்டாவது கூட்டத் தொடருக்கும் இவர் தலைமை வகிக்கவுள்ளார்.

(தி-60)

## பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான

# தொலைக்கல்வி நிலையங்களின் நிலைமைகளை ஆராய குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

பதவிநிலை உத்தியோகத் தர்களுக்கான தொலைக்கல்வி நிலையங்களின் நிலைமைகளை ஆராய்வதற்கும் அங்கு கற்போரு டன் கலந்துரையாடல்களை மேற் கொள்வதற்கெனவும் கொழும்பி லிருந்து அதிகாரிகள் யாழ்ப்பா ணம் வருகைதரவுள்ளனர்.

இம்மாதம் 30 ஆம் திகதி வருகைதரும் இவர்கள் அன்றைய தினம் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய 4 தொலைக்கல்வி நிலையங் களின் அதிகாரிகளையும் சந்திக் கவுள்ளனர்.

அத்துடன், மறுநாள் காலை 9 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் தொலைக்கல்வி பயில்வோருக்கான கருத்தரங் கொன்றையும் இவர்கள் நடத்த வுள்ளதாக மேலதிக அரச அதி பர் திருமதி பத்தினியம்மா திலக நாயகம்போல் தெரிவித்துள்ளார்.

(உ-3,7)

# கூட்டமைப்பு ஒப்பந்தம் பற்றி பொதுமக்களுக்கும் அறிவிப்பு

## ஸ்ரீ.சு.க. ஊடகப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கைச்சாத்தாகவுள்ள கூட்டணி ஒப்பந்தம் தொடர்பான 5 முக்கிய திட்ட வரைபுகள் குறித்து விரை வில் பொதுமக்களுக்கு அறிவிக் கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் கலா நிதி சரத்அமுனுகம தெரிவித்துள் ளார்.

நேற்று முன்தினம் கொழும் பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசு கையிலேயே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

இதற்கமைய, பொருளாதாரம், இனமோதல், வெளிநாட்டுக்கொள் கை, கலாசாரம், ஜனநாயகம் ஆகிய திட்டவரைபுகள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இம்மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க்கட்சிகளின் தலைமை அமைப்பாளர் மங்கள சமரவீர உரையாற்றுகையில்,

ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிப்பது தொடர்பாக சர்ச்சைகள் ஏதாவது எழுந்தால் அவற்றை சட்ட வரையறை மூலமாகவே தீர்க்க வேண்டும்.

இவைதவிர, கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி ஜனாதிபதி யால் பொறுப்பேற்கப்பட்ட 3 முக் கிய அமைச்சுக்களையும் அரசி டம் மீள ஒப்படைக்க முடியாது என்றும் முடியுமானால் அரசாங்கம் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனவும் சவால் விடுத் தார்.

(உ-10)

### இறுவட்டுகள் குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் முகாமைத் துவ மென்பொருள் கற்றலுக்கான பல்ஊடக இறுவட்டுகள் பற்றிய கலந்தாலோசனையும், பத்திரிகை யாளர் சந்திப்பும் இன்று மு.ப.10 மணிக்கு கண்டி வீதியில் உள்ள பஸ்தியான் ஹோட்டலில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிர திநிதிகள், கல்விப் பணிப்பாளர் கள், பாடசாலை அதிபர்கள், தமிழீழ மாணவர் பேரவை மற்றும் அரசியல்துறை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பேராசிரியர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ- 3,7)


வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-16.00
சங்கு நாதம்
(19-25 ஜனவரி 2004)
Sankunatham
சங்கு :-03 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :-45


சங்குநாதம்
தேர்தல் வரும் சாத்தியம் உண்டா?
இலங்கையைப் பாதுகாக்க





அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

இந்தியாவுடன் ஒப்பந்தம்

மீண்டும் சூடு பிடிக்கும் ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டு

ஆலடி மாநாடு

வியாபாரியின் பதில்கள்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள்... (தொடர்கதை)

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

# சங்குநாதம்

விலை ரூபா. 16.00

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



## விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த
# இடைக்கால நிர்வாக யோசனைகளை அரசு தட்டிக்கழிப்பது அர்த்தமற்றது

## வண. மாதம்பாகம அஸ்ஸஜீ தேரர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள 'இடைக்கால நிர்வாகத்துக்கான திட்ட வரைபினை அரசாங்கம் எவ்விதமான சாட்டுப்போக்கும் கூறாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன் மூலம் வடக்கு கிழக்கு சமாதானத்தினை அர்த்தமுள்ளதாக்க வேண்டும்.

என மக்கள் சமாதான அரங்கின் கூட்டு அழைப்பாளர்களில் ஒருவரான வண. மாதம்பாகம அஸ்ஸஜீ தேரர் நேற்றைய தினம் கியூடெக் நிறுவனமண்டபத்தில் நடாத்தப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மக்கள் சமாதான அரங்க தயார் நிலைக்கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

யாழ்மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரான சு. பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொது அமைப்புக்களைச் சேர்ந்த சுமார் 50 பிரதிநிதிகள் பங்குகொண்டனர்.

வண. மாதம்பாகம அஸ்ஸஜீ தேரர் அங்கு தொடர்ந்து பேசும் போது,

மக்கள் சமாதான அரங்கு என்பது நாட்டில் சமாதானத்தினை அர்த்தம் கொண்டதாக்குவதற்காகப் பாடுபடும் ஒரு அமைப்பாகும். நாட்டில் பாராளுமன்றத் தேர்தல் இனி வேண்டாம் எனவும் மாகாண சபைத்தேர்தலில் சமாதானக்குரல் வலியுறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றது.

சமாதானத்தை நிலை நாட்டும் பணியில் மக்களின் சக்தியைப் பயன்படுத்தவேண்டும். சமாதானம் நாட்டுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை இன்று நாம் புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. நாடு இன்னொரு யுத்தத்தினை இனிமேல் தாங்க மாட்டாது. எனவே நாம் இது விடயத்தில் எமக்குள்ளிருக்கும் பேதங்களையும் உயர்வு தாழ்வுகளையும் மறந்து சமாதானத்துக்காகப் பணி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்.



### வணபிதா. ஏ.ஜ.பேர்னாட்

நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் இணைப்பாளரான வணபிதா. ஏ.ஜ.பேர்னாட் அங்கு குறிப்பிடும்போது,

சமாதான முயற்சி தொடரவேண்டும் என அரசியல்வாதிகளும் பொது மக்களும் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் இப்போது இருக்கும் நிலை ஆபத்தானது. இதனால் தமிழ் மக்கள்தான் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றார்கள். சிங்கள மக்கள் நல்ல பயனையும் நன்மையையும் அடைகின்றனர்.இந்த நிலை தென்னிலங்கை மக்களுக்கு நல்ல வாய்ப்பாகும்.

ஆனால், இங்குள்ள எமது மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றனர். அதேவேளை, தென்பகுதியில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.ஆனால் இங்கு எமது பொருளாதார வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.இந்த நிலை தொடரவேண்டும் என்று நினைப்பவர்கள் சமாதானத்தின்பால் உண்மையான விசுவாசம் அற்றவர்களாகவே கருதப்படவேண்டியவர்கள்.

கருத்து முரண்பாடும் புரிந்துணர்வும் இல்லாமைதான் இன்றைய நிலைக்குக்காரணம் எனத் தெரிவித்தார்.

### மௌலவி சுபியான்

யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் குழுவின் தலைவரான மௌலவி சுபியான் அங்கு கருத்துரை வழங்கும் போது,

நாட்டில் உண்மையான சமாதானம் ஏற்படவேண்டுமாயின் இனவாதம் ஒழிக்கப்படவேண்டும் சமாதானத்தின் துரோகிகள் அதிகார வர்க்கத்தினர்தான். சமாதானம் பற்றிய தெளிவு நிலையையும், விழிப்புணர்வையும் நாம் இந்த அமைப்பின் மூலம் ஏற்படுத்த வேண்டும். சாதாரண பொதுமக்கள் மத்தியில் சமாதானம்பற்றிய நிலைப்பாட்டினை ஏற்படுத்த வேண்டும். எமது மக்களை சமாதானத்தின் பால் நாட்டமுள்ள மாபெரும் சக்தியாக மாற்றிக் கொள்வதன் மூலம் தான் சமாதானத்தின் உச்ச பயன்பாட்டை அனுபவிக்கமுடியும் என்றார்.

### சு. பரமநாதன்

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் அங்கு உரையாற்றும்போது,

நாம் எல்லோரும் இப்போதும் சமாதானம் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கிறோமேயொழிய செயலளவில் எதுவும் செய்யவில்லை. இனிமேல் கதைகள், இனியும் வேண்டாம். செயல்தான் வேண்டும். சமாதானத்தின் கனிகளை மக்கள் உண்மையாகவே நுகரவேண்டும். நிலையான நிரந்தரமான சமாதானம் இல்லை என்றால் நாம் வாழ்வதே பெரிய கஷ்டமாகும் எனக்குறிப்பிட்டார்.

### பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் அலகின் பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அங்கு பேசும் போது, நாட்டின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகாரம் தொடர்பான போட்டிகளும், முரண்பாடுகளும் வளர்ந்து கொண்டே போகின்றன. நாட்டை முன்வைத்து இப்பிரச்சினை அணுகப்படவில்லை. அரசியல் அதிகாரப்போட்டியே இன்று நடைபெற்று வருகின்றது. இதில் தமிழர்களாகிய நாம் பலிக்கடாவாகியுள்ளோம்.

இன்றைய சமாதான நிலையால் அதிக நன்மைகளைப் பெற்றவர்கள் தென்பகுதி மக்கள் தான் நாம் நாட்டில் நிரந்தர சமாதானத்தினை ஏற்படுத்தவேண்டுமாயின் எமது மக்களின் சக்தியைத் திரட்ட வேண்டும். செயற்படவேண்டும். சிங்களப்பகுதிகளின் இனவாதத்திற்கு எதிரான கருத்துக்களைப் பரப்ப வேண்டியது இன்றைய தேவையாகும் என்றார்.

இச்செயலமர்வின் போது யாழ்ப்பாணமாவட்டத்தில் மக்கள் சமாதான அரங்கு பணிகளைப் முன்னெடுப்பதற்கு என 15 பேர்கொண்ட அமைப்புக்குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இதன் முதல் செயற்பாடாக பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 200பேர் பங்குகொள்கின்ற மக்கள் சமாதான அரங்கு ஒன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்துவது எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

(உ-16)

# ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியவர் கேணல் கிட்டு

## நினைவு தின நிகழ்வில் பேராசிரியர் வி.பி. சிவநாதன்

(பருத்தித்துறை)

சர்வதேசமே மதிக்கத்தக்க வகையில் தொலைநோக்குச் சிந்தனையுடன் செயல்பட்ட தளபதி கேணல் கிட்டுவை இலகுவில் எவரும் மறந்துவிட முடியாது. பொதுமக்களின் சிறந்த நண்பனாகவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நல்ல தோழனாகவும் போராட்ட வரலாற்றின் சிறந்த இராஜதந்திரியாகவும் விளங்கிய பெருமை இவரையே சாரும்.

நேற்று முன்தினம்தீருவிலில் இடம்பெற்ற மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 11வது ஆண்டு நினைவு தின நிகழ்வில் உரையாற்றிய யாழ். பல்கலைக கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி. பி. சிவநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள் அன்று செய்த அரிய தியாகத்தின் அடிப்படையிலே தற்போது சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களின் தியாகங்கள் போற்

ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டுமென்பதில் முனைப்புடன் செயற்பட்ட இவர்,1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்று சிறந்த செயற்பாடுகளையும் கருத்துக்களையும் முன்னெடுத்துச் சென்றவர்.

ஆயுதப்போராட்டத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணரவைத்ததுடன் ஆயுதப் போராட்டங்களின் மூலமே இனவிடுதலை ஏற்படும் என சுட்டிக்காட்டி, புதிய புதிய ஆயுதங்களைப் (50கலிபர்) பரீட்சித்துப் பார்த்தார்.

இன விடுதலைக்கான போராட்ட வரலாற்றில் மிக முக்கியமான ஆரம்ப கர்த்தாவான இவரை என்றென்றும் நினைவு கூருவதற்குத் தமிழர்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம் எனக்குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய கடற்புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூரணி,

தமிழருக்கென தனிநாடு வேண்டும் சுதந்திரமான வாழ்க்கை வேண்டும் இனப்படுகொலைகள் மற்றும் தரப்படுத்தல் போன்றன முற்றாக


மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள முகாம் களிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தை மிகக்குறைந்த எண்ணிக்கையான போராளிகளைக் கொண்டு திருப்பியனுப்பிய கேணல் கிட்டு வீரமும் விவேகமும் போர்த்தந்திரோபாயமும் நிறைந்த தளபதி யாவார் என்றார்.

வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.தாயகன் அங்கு உரையாற்றுகையில்,

இராணுவத்தினரை முகாம்களில் முடக்கி ,குடாநாட்டை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பெருமை கிட்டுவையே சாரும்.

போராளியாக புகைப்படக் கலைஞனாக எழுத்தாளனாக தளபதியாக இவற்றைவிட சிறந்த அரசியல் இராஜதந்திரியாகத் திறமையுடன் செயற்பட்ட கிட்டு இந்திய வல்லாதிக்கத்தின் பிடியில் சிக்கி ஏனைய போராளிகளுடன் வீரகாவியமானதை யாரும் மறக்க முடியாது.

இவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட கேணல் கிட்டு பீரங்



கலாநிதி எஸ். சிவலிங்கராசாவின் "சொல்லினால் ஒரு மாளிகை" கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும், அருகில் ஈ.குமரன், கவிஞர் சோ. பத்மநாதன், எஸ். கருணாகரன் நூலாசிரியர் மற்றும் பா. மகாலிங்கசிவம் ஆகியோர் மேடையில் இருப்பதையும் படத்தில் காணலாம்.



தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கேணல் கிட்டு நினைவாக இணுவில் வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானம் மற்றும் மரம் நாட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் வலி. தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி. குமாரவேல் மரமொன்றை நாட்டுவதையும் அருகில் பேரவையின் செயலாளர் சொலமன் சூ. சிறில் உட்பட மற்றும் சிலர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களின் தியாகங்கள் போற்றத்தக்கவை. விடுதலைப் புலிப் போராளிகளில் மிக முக்கியமானவரான கிட்டு எல்லாத் தரப்பினரதும் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானவர்.

தரப்படுத்தல் போன்றன முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கங்களை நிறைவேற்றப்பாடுபட்ட கேணல் கிட்டுவை ஒரு போதும் மறக்க முடியாது.

1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பருத்தித்துறை தொட்டிலடி வாக்கப்பட்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணி மற்றும் குட்டி சிறி பீரங்கிப் படையணி போன்றவை போராட்ட காலத்தில் ஆற்றிய சாதனைகள் பலப்பல இவை ஒரு போதும் மறக்க முடியாத எனக் குறிப்பிடடார். (உ-52)

# அதிகாரத்தை விரும்பும் அதிகாரிகளுக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவர்

## காணி அமைச்சர் ராஜித ஆதங்கம்

(கொழும்பு)

தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு தடங்கலாக இருப்பவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் கற்பிப்பார்கள்.

இவ்வாறு காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண களுத்துறை நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமாதான கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

மக்களின் சமாதானம் பற்றிய எதிர்பார்ப்புகளை ஏமாற்றம் அடையச் செய்து நாட்டின் பொருளாதாரத்தை பாதாளத்தில் தள்ளிவிடும் முயற்சிகளாக இது அமைந்துவிடும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 3 முக்கிய அமைச்சுக்களை கடந்த நவம்பர் மாதம் 4ஆம்திகதி பொறுப்பேற்றது முதல் நாட்டின் அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளன.

இக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சரவைப்பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்,

சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்தால் அதற்கான அனைத்துப்பொறுப்புக்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்க வேண்டும.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது விமர்சனம் செய்த ஜனாதிபதி, தற்போது அதனைக் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் இனப்பிரச்



சினை குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்ட தீர்வுக்கு அவர் சாதகமான பதிலையும் தந்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-60)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

18

முதலாம் பகுதி

### தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

பாண்டியர் படையெடுப்புகள் நடைபெற்ற காலத்திலும் அவற்றைத் தொடர்ந்து ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி அமையப் பெற்ற நாட்களிலும் மாதோட்டம் முதலாக வெருகல் வரை பரந்துள்ள வன்னிப் பகுதியிலே பாண்டி நாட்டுத் தொடர்புடைய பிரதானிகள் அதிகாரம் பெற்றனர்.

முதலாவது சிங்கையாரியனின் காலத்தில் வன்னியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றிய சில விபரங்கள் வையாபாடல் என்னும் நூலில் அடங்கியுள்ளன. அவற்றை மேல்வருமாறு சுருக்கிக்கூறலாம் : யாழ்ப்பாணத்து அரசனுக்கு மணம் முடித்து வைப்பதற்கென்று வன்னியர்கள் இராசகுமாரி ஒருத்தியை மதுரையில் இருந்தும் அழைத்து வந்தார்கள். அவன் வன்னியரை அழைத்து அடங்காப்பற்றுக்குச் சென்று அதனைக் கைப்பற்றி ஆட்சி புரியுமாறும், யாழ்ப்பாணத்து இராசதானிக்கு ஆண்டு தோறும் திறை செலுத்துமாறும் பணித்தான். வன்னியர்கள் அடங்காப்பற்றுக்குச் சென்று அங்கு நிலை கொண்டார்கள். அதைக் கைப்பற்றுவதற்கு மேலும் படைத்துணை வேண்டும் என்ற உணர்வால் உடனடியாகத் தங்களோடு வந்துசேருமாறு மதுரை,மருங்கூர், காரைக்கால், காஞ்சிபுரம், கோவற்பதி , திருச்சிராப்பள்ளி , துளுவை நாடு, தொண்டை மண்டலம் முதலான இடங்களில் இருந்து பல திறத்தாரை அழைத்து வருமாறும் இளஞ்சிங்க மாப்பாணன், அத்திமாப்பாணன், நல்லவாகுதேவன் முதலியோருக்குச் செய்தி அனுப்பினார்கள். இதன் பயனாக இளஞ்சிங்க மாப்பாணன் , திடவீரசிங்கன், குடைகாத்தான், மலைநாடன், நல்லவாகு,சிங்கவாகு, நீலாசோதையன், அங்கசிங்கன், கட்டைக்காலிங்கன், கலைக்கோட்டுமுடியோன், சொர்க்கநாதன், வீரகசச் மணி முடியரசன், காபாலிவீரன் , “ சேதுதிறலரசு புரியும் வீரன்” முதலானோரும் ஆரிய வமிசத்தாரும் கப்பல் ஏறிக் கடல் கடந்து யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தனர்.

அவர்களிலே திடவீரசிங்கன் கரிக்கட்டு மூலைப்பற்றின் அதிபதியானான். நல்லவாகு, மெய்த்தேவன், கறுத்தவாகு, சிங்கமாப்பாணன் ஆகியோர் சான்றாரையும் வலையரையும் துரத்திவிட்டு முள்ளியவளையைக் கைப்பற்றினார்கள். நீலையினார் திசையாண்டாரும் படைசனங்களும் மேல்பற்றிலுள்ள சகரன், மகரன் என்னும் வேட்டுவரின் தலைவர்களைக் கொன்றுவிட்டு அங்கு ஆதிக்கம் பெற்றனர். சிங்கவாகு கிழக்கு மூலை, மேற்கு மூலை ஆகியவற்றைக் கைப்பற்றிக்கொண்டு போக்காவன்னியில் இருந்தான். சுபதிட்டு என்னும் அந்தணனும் படையினரும் திரியாய் என்னும் ஊருக்குப் போய் நீலப்பணிக்கனைத் துரத்திவிட்டு அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். காலிங்கன் மலையகத்தார், கன்னார் ஆகியோருடன் சென்று கச்சாயில் வாழ்ந்தான். அங்கசிங்கன் கட்டுக்குளம்பற்றுக்குச் சென்று அங்கு தங்கியிருந்தான் . சிங்கவாகு திருகோணமலைக்குப் போனான். மாமுகன் என்பான் தம்பலகாமம், வெருகல் என்பவற்றைக் கைப்பற்றி அவற்றை ஆட்சிபுரிந்தான். மயிலன் என்பவன் கொட்டியாரத்திற்கு அதிபதியானான். நீலன், சன்மன் என்போர் முறையே இத்திமடு, நொச்சிமோட்டை ஆகியவற்றில் இருந்தனர்.

மதுவீரமழுவராயனும், “அரசாண்ட” மழுவராயனும் “அழகாபுரி என விளங்கிய ” யாழ்ப்பாணத்தில் மன்னனுடன் இருந்தனர். வன்னியர் மூவர் முகமாலையில் இருந்தனர். கோவலர் வமிசத்தோன் தேவராஜன், கிளைகாத்தான், கொடிதேவன், கந்தவனத்தான் என்போர் செட்டிகுளத்தில் ஆதிக்கம் பெற்றனர். உத்துங்கராயன் பனங்காமத்தின் அதிபதியானான்.

வையாபாடலின் விபரங்களைப் புரிந்து கொள்வதில் முன்பு ஞானப்பிரகாசர் முதலாயினோருக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது. அதிலுள்ள விபரங்களை வரலாற்று நிகழ்ச்சிக

வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

**கவிதைப் போட்டி -2004**

1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
**“தமிழா உனக்கேன் இக்கதி”**

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**
இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

வையாபாடலின் விபரங்களைப் புரிந்து கொள்வதில் முன்பு ஞானப்பிரகாசர் முதலாயினோருக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது. அதிலுள்ள விபரங்களை வரலாற்று நிகழ்ச்சிகளோடு பொருத்திப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்காமையால் அந்தத் தடுமாற்றம் அவர்களுக்கு ஏற்பட்டது. காலவரையறை பற்றிய குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு வையாபாடல் எழுதப்படவில்லை. பல்வேறு காலப்பகுதிகளைச் சேர்ந்த நிகழ்ச்சிகளும் ஏககாலத்திற்குரியனவாக அதிலே சங்கமமாகிவிடுகின்றன. நாட்டார் இலக்கியத்தில் இத்தகைய பண்புகள் இயல்பானவை. வையாபாடல், நாட்டார் வழக்கில் உள்ள கதைகளை அடிப்படையாகக்கொண்டது. அதிலுள்ள வன்னியர் பற்றிய கதை கற்பனைக் கதையன்று ; அது மரபு வழிக்கதை ; ஆசிரியரின் காலத்துச் சமுதாய நிலைகளின் அடிப்படையில் மீளமைக்கப்பெற்று இலக்கிய வடிவம் பெற்ற கதை. எனவே அதில் முக்கியமான சில வரலாற்றம்சங்கள் உண்டு.

வையாபாடல் வர்ணிக்கும் வன்னியர்கள் பாண்டிநாட்டுத் தொடர்புடையவர்கள். அவர்கள் மதுரை நகரால் வந்தவர்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் வன்னிமைப் பதவிப்பெயர் அவர்களுடன் ஆரம்பமாகியது என்று கொள்வதற்கான காரணம் இல்லை. அது முன்னரே ஏற்பட்டவொன்று. வையாபாடலிற் கூறப்படும் "வன்னியர் " குலத்தால் வன்னியரல்லர். வன்னியில் வந்து அதனைக் கைப்பற்றிப் பதவி பெற்றதால் அவர்களுக்கு வன்னியர் என்னும் சிறப்புப் பெயர் உரியதாகியது. பலரின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. பெயர்களை வரிசைப்படுத்திப் பார்க்குமிடத்து பட்டியல் நீளமாகவுள்ளது. பல இடப்பெயர்களும் சொல்லப்படுகின்றன. கரிக்கட்டு மூலை, கருநாவல் பற்று, பனைங்காமம் , முள்ளியவளை, மேல்பற்று, செட்டிக்குளம், தென்னமரவாடி முதலானவற்றைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தோரின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இப்பற்றுகள் யாவும் யாழ்ப்பாணப்பட்டினம் என்னும் இராச்சியத்தினுள் அடங்கிய வன்னிப்பிரிவுகளாகும். திருகோணமலைப் பிராந்தியத்தில் உள்ள தம்பலகாமம்பற்று, திருகோணமலை, கட்டுக்குளம், கொட்டியாரம் என்ற பிரிவுகளைக் கைப்பற்றிய தலைவர்களின் பெயர்களுஞ் சொல்லப்படுகின்றன.

(தொடரும்)

## அருஞ்சொல் விளக்கம் (தொடர்ச்சி)

**வாரம்-** தானிய வரி; இறை கடமை. இலங்கையில் யாழ்ப்பாண இராச்சியத்தில் வழங்கிய சொல்.

**வாரிக்காலன் (மு )-** சூடு மிதிக்கும் மாடுகளையும் எருமைகளையும் குறிக்கும் சொல். மட்டக்களப்பு தேசத்தில் வழங்குவது.

(முற்றும்)

## இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்

அலுவலகப்பாவனைக்கு

| | |
|---|---|
| | |

முழுப்பெயர்.........................
.........................

தபால் முகவரி.........................
.........................

பிறந்த திகதி.........................

தே.அ.அ. இல .........................

மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

..........
திகதி

..............................
போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.................
திகதி

..............................
போட்டியாளர்கையொப்பம்

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# செய்தித் துளிகள்

## ஜனாதிபதி விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள புத்தாக்குநர்களை ஊக்குவிக்கும் நோக்கில், வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சின் கீழான இலங்கை புத்தாக்குநர் ஆணைக் குழுவால் வழங்கப்படும் ஜனாதிபதி விருது மற்றும் தேசிய விருது ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தனிநபர்கள், நிறுவனமயப்படாத குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியன இலங்கை பெட்டன்ட் அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தால் மாத்திரமே ஜனாதிபதி விருதுக்காக விண்ணப்பிக்க முடியும். அத்துடன், பாடசாலை மாணவர்கள் மாத்திரம் தேசிய விருதுக்காக விண்ணப்பிக்க முடியும்.

இவ் விரு விருதுகளுக்கும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படவேண்டும். இதேவேளை, இது தொடர்பான முழு விபரங்களையும் ஆணைக்குழுவின் **www.commerce.go.lk/**எனும் இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என இலங்கை புத்தாகுநர் ஆணைக்குழுவின் ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ-18)

## மனையியல் கண்காட்சி

(ஏழாலை)

வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் கண்காட்சியும், விற்பனையும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளையும் நெல்லியடி கரவெட்டி முருகன் திருமண மண்டபத்தில் காலை 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் க.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-90)

## தமிழ் உலகம் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

## பரிசு நிதியம் ஆரம்பித்தலும் பரிசு நாளும்

(கோப்பாய்)

பேராசிரியர் சி.சூரியகுமாரன் பரிசு நிதியம் ஆரம்பித்து வைத்தலும், பரிசு நாள் விழாவும நாளை திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு கோப்பாய் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் கே.வி. குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் சி.சூரியகுமாரன் மண்டபத்தை பாடசாலையின் பழைய மாணவி செல்வி பு.முத்துக்குமாரசுவாமி வைபவரீதியாகத் திறந்து வைப்பார். இதில், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் மற்றும் சிறிமுருகன் ஜுவலறிஸ் உரிமையாளர் த. மணிவண்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், வலி-கிழக்கு அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் து.கிரி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இடம்பெறவுள்ள பரிசு நாள் விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரதம விருந்தினராகவும், அதிபர் மு.விக்னேஸ்வரன சிறப்பு விருந்தினராகவும் ஓய்வுபெற்ற அதிபர் ஆ.சி. நடராசா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.(உ-18)

## வேரடிமண் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய கலை விளையாட்டு விழா-வேரடிமண்ணில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை தச்சன்தோப்பில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (உ)

## மீளாய்வுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் இயங்கும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி அணை

## விசர் நாய் தடுப்பு மருந்து ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் நாளை 19 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 22ம் திகதி வரையான தினங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இந்த வகையில், நாளை திருநெல்வேலி காளி கோவிலடி சனசமூக நிலையத்திலும் 20 ஆம் திகதி நல்லூர் பிரதேசசபை, திருநெலவேலி பாரதி சனசமூக நிலையம், கம்பன் சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் 21 ஆம் திகதி வாலையம்மன் சனசமூக நிலையம், மாரியம்மன் கோவிலடி, கலைச்சுடர் சனசமூக நிலையம் ஆகியவற்றிலும், 22 ஆம் திகதி இலங்கை நாயகி சனசமூக நிலையம், கலைமகள் சனசமூக நிலையம், கலைத்தமிழ் கலாமன்றம் ஆகிய வற்றிலும் நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது. (உ)

## ஈரலிப்பு பிரதேச தேசியக் கொள்கை

(கொழும்பு)

ஈரலிப்பு பிரதேசங்கள் குறித்து தேசியக் கொள்கை ஒன்று வகுககப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுற்றாடல் நீரியல் வள அமைச்சு தெரிவித்துள் ளது.

தேசியக் கொள்கை ஒன்று இதுவரை வகுக்கப்படாமையால் பல ஈரலிப்புத் தன்மை உள்ள பிரதேசங்கள் வளம் குன்றி வருகின்றது.இது தொடர்பில் சுற்றாடல் நீரியல் வள அமைச்சு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

இம்மனுவைப் பரிசீலித்த பின்னர் இது தொடர்பாக தேசியக் கொள்கை ஒன்றை வகுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதேவேளை, இக்கொள்கையை அமுலாக்கம் பற்றிய முன்னேற்ற அறிக்கையை மார்ச் மாதம் 9 ஆம் திகதி தன்னிடம் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

## வீடியோ படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00

# முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும்
## வசீர் சேகுதாவுத் கோரிக்கை

(மட்டக்களப்பு)

தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஒன்றுபட வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வசீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடியில் சமாதான நீதவான்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் வைபத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகியவர்கள் அனைவரும் மீண்டும் அக்கட்சியில் சேர்ந்துகொள்ள வேண்டும்.

இல்லையேல், பொது இணக்கப்பாடு ஒன்றின் கீழ் முஸ்லிம் அரசியல் முன்னணி ஒன்றினை உருவாக்கி சகல முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஒருமனதாகச் செயற்படவேண்டும் என அவர் அங்கு கோரிக்கை விடுத்தார். (தி-60)

# வெலிகம பகுதியில் விபத்து நால்வர் பலி;48 பேர் காயம்

(காலி)

வெலிகம,கும்பாகமுவ சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற விபத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், 48 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பஸ் வண்டியும்,மாத்தறையில் இருந்து காலி நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியதால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் அனைவரும் தனியார் பஸ் வண்டியில் பயணம் செய்தவர்கள் என்பதுடன், இவர்களில் ஒருவர் யாஎல பிரதேசத்தைச் சேர்ந்த றுகுணு பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் என இனங்காணப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் அனைவரும் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையிலும், மாத்தறை மற்றும் வெலிகம வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(தி-60)

### சுகாதார ஊழியர்களுடன்
# அமைச்சு மட்டக் குழு அடுத்தவாரம் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக மற்றொரு அமைச்சு மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்த சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சுகாதார சேவை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பேச்சுவார்த்தையின போது சுகாதார சேவை தொழிற் சங்கங்கள் பிரதானமான 3 கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளன.

இநதப் பேச்சுவார்த்தையின் போது சுமுகமான தீர்வு கிடைக்காதுவிடில், கடுமையான தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (தி-60)

# 10 ஆயிரம் சிறுமியர் மீது பாலியால் துஷ்பிரயோகம்
### வருடாந்தம் இடம்பெறுகிறதாம்

(கொழும்பு)

வருடாந்தம் 10 ஆயிரம் சிறுமியர் தமது குடும்ப அங்கத்தவர்களால் பாலியல் துஷ்பிரயோகத்

குடும்ப அங்கத்தவர்களால் சுமார் 10 முதல் 14 வயது வரையான சிறுமியர் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்

## தமிழ் உலகம் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் மன்றம் நடத்தும்
“தமிழ் உலகம்” இதழ் அறிமுக
விழா எதிர்வரும் 20 ஆம் திகதி
செவ்வாய்க்கிழமை பி.ப 4மணி
க்கு யாழ்.பல்கலைக்கழக நூலக
கேட்போர் கூடத்தில் இடம்பெற
வுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைமையில் இடம்பெறவுள்ள
இந் நிகழ்வில் அறிமுகவுரை
களை கலாநிதி என். சண்முக
லிங்கன், கலாநிதி எஸ்.சிவலிங்க
ராஜா, கலாநிதி தி.கமலநாதன்
ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.
(உ)

## “அஹறதிய்யா” ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

இஸ்லாமிய அறிவை வளர்
க்கும் நோக்குடன், யாழ்ப்பாணம்
மற்றும் கிளிநொச்சி மாவட்ட
உலமா சபையினால் அமைக்கப்
பட்ட “அஹறதிய்யா” ஞாயிறு இஸ்
லாமிய கல்வி நிலையத்தின்
ஆரம்பவிழா இன்று ஞாயிற்றுக்
கிழமை பி.ப 4.30 மணிக்கு
உலமா சபைத்தலைவரும் அமைச்
சர் ரவூப் ஹக்கீமின் இணைப்
பாளரும் மக்கள் பணிமனைத்
தலைவருமான மௌலவி பி.ஏ.எஸ்.
சுப்யான் தலைமையில் யாழ்.ஒஸ்
மானியாக் கல்லூரியில் நடை
பெறவுள்ளது. (உ)

கூட்டம் நாளை திங்கட்கிழமை
மு.ப 10.30 மணிக்கு யாழ்.
மாவட்ட சமுர்த்தி உதவி ஆணை
யாளர் தி.மகேஸ்வரகுமார் தலை
மையில் யாழ்.செயலகத்தில்
நடைபெறவுள்ளது. (உ-75)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்
தில் மனிதவள அபிவிருத்திப் பயி
ற்சி நெறிகளுக்கு பயிலுநர்கள்
சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கமைய கணனி, மீன்பிடி
உபகரணத் திருத்தம், பனைவள
கைப்பணி ஆகிய பயிற்சி நெறி
களுக்கு விண்ணப்பங்கள் கோரப்
பட்டுள்ளன. (உ-75)

## புதினப் பத்திரிகைகள் திருட்டு

(நவாலி)

சுதுமலை மத்திய சனசமூக
நிலையத்தில் செய்திப் பத்திரி
கைகளைத் திருடிச் செல்லும்
நடவடிக்கையில் விசமிகள் சிலர்
ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இங்கு பத்திரிகை
படிக்கச் செல்வோர் பெரும்
ஏமாற்றமடைந்துவருகின்றனர்.

இவ்வாறு செய்திப் பத்திரி
கைகளைத் திருடுவோரை இனம்
காணும் முயற்சியில் சனசமூக
நிலைய நிர்வாகத்தினர் ஈடுபட்
டுள்ளனர். (உ-102)

யத்தின் ஏற்பாட்டில் இன்று
ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00
மணிக்கு புவியியற்றுறை மண்ட
பத்தில் “அபர்ணா சென்னின்”
நெறியாள்கையில் உருவாக்கப்
பட்ட “மிஸ்ரர் அன்ட் மிஸஸ்
ஐயர்” என்ற ஆங்கிலப்படம் காண்
பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின் இறுதியில்
எழுத்தாளர்கள் அ.ஜேசுராசா,
க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்
படுத்துதலின் கீழ் மேற்படி படம்
பற்றிய கலந்துரையாடல் ஒன்றும்
இடம்பெறவுள்ளது. (தி)

## தீ மிதிப்பு

(தொல்புரம்)

சித்தன்கேணி அருள்மிகு
ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயத்
தில் எதிர்வரும் 22 ஆம் திகதி
வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு
தீ மிதிப்பு நடைபெற்றுத் தொடர்
ந்து அக்கினி குண்டத்தின் மீது
விஷேட அபிஷேக ஆராதனைகள்
நடைபெறவுள்ளன. (உ-70)

## புலமைப்பரிசில் பெறுபேறு மாத இறுதியில

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் நடை
பெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில்
பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாத
இறுதியில் அல்லது அடுத்தமாதத்
தொடக்கத்தில் வெளியிடப்படு
மென பரீட்சைத் திணைக்களம்
அறிவித்துள்ளது. (த)

மியர் தமது குடும்ப அங்கத்தவர்
களால் பாலியல் துஷ்பிரயோகத்
திற்கு உள்ளாக்கப்பட்டு வருவ
தாக பெண்களுக்கான ஆய்வு
நிலையம் நடாத்திய அண்மைக்
கால ஆய்வுகளிலிருந்து தெரியவந்
துள்ளது.

குடும்பத் தலைவிகள் வறுமை
உள்ளிட்ட மற்றும் பல காரணங்
களுக்காக வெளிநாடுகளுக்கு செல்
லும் குடும்பங்களிலேயே பெரும்
பாலும் இவ்வாறான துர்ச்சம்பவங்
கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறான குடும்பத்தை நிர்
வகிக்க யாருமற்ற நிலையில், அக்

சிறுமியர் பாலியல் துன்புறுத்தல்
களுக்கும் துஷ்பிரயோகங்களுக்
கும் உள்ளாக்கப்பட்டு வருகின்ற
னர்.

இவர்களில் அரைவாசிக்கு அதி
கமானோர் மதுப்பாவனை மற்றும்
போதைப் பொருள் பாவனை ஆகி
யவற்றுக்கு அடிமையாவதன்
காரணமாக தமது தகப்பன்மாரா
லேயே பாலியல் துஷ்பிரயோகங்
களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவ
தாக அதிர்ச்சியூட்டும் தரவுகள் இவ்
ஆய்வின் மூலம் கிடைக்கப்பெற்
றுள்ளது.
(உ-18)

# கடுவல பிரதேச சபையின் தலைவர் நிதி மோசடி

(கொழும்பு)

கடுவல பிரதேச சபையின்
தலைவர் நிதி மோசடி செய்துள்ளாா
என இலஞ்ச ஊழல் விசாரணை
ஆணைக்குழுவிடம் முறைப்பாடு
செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற
காணிக் கொள்வனவு ஒன்றில் இவர்
16 இலட்சம் ரூபாவை மோசடி செய்
தார் என பிரதேச சபையின் எதிர்க்
கட்சி உறுப்பினர்கள் மேற்படி
ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்
துள்ளனர்.

மிலேனியம் சிற்றி கம்பனி கடு
வல பிரதேச சபைக்கு மயானக் காணி
ஒன்றை விற்பனை செய்தது. ஒரு பேர்ச
காணியின் விலை 5 ஆயிரத்து 500
ரூபா மதிப்பிடப்பட்டிருந்த போதி
லும், 8 ஆயிரத்து 500 ரூபா விலைப்
படி மொத்தம் 505 பேர்ச் காணி
கொள்வனவு செய்யப்பட்டது.

இக்காணிக் கொள்வனவிலேயே
பிரதேச சபையின் தலைவர் மோச
டிகளில் ஈடுபட்டார் என பிரதேச
சபையின் எதிர்க்கட்சித் தலைவர்
வி.எஸ்.புத்ததாஸ தலைமையிலான
குழுவினர் ஆணைக்குழுவில் முறை
பாடு செய்துள்ளனா. (தி-60)

# இன்றைய சூழலில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வது கடினமான விடயம்

## க.கா.குழுத் தலைவராக மீண்டும் பதவியேற்கவுள்ள ரொன்ட் பியூறு ஹெவ்டே பி.பி.சிக்கு பேட்டி

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளையும் அரசாங்கத் தரப்பையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்திய அர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னரே தனது பணிகளைத் தொடருவேன் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக மீண்டும் பதவியேற்கவுள்ள மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் பியூறு ஹெவ்டே பி.பி.சிக்கு வழங்கிய விஷேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து இது பற்றிக் கருத்துக் கூறுகையில்,

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் கண்காணிப்புக் குழுவின் தலைவராக நான் மீண்டும் பணியாற்றவுள்ளேன்.

சமாதான முயற்சிகள் கைவிடப்பட்ட நிலையில் யுத்த நிறுத்த கண்காணிப்புப் பணிகளை முறையாக மேற்கொள்ளுவது என்பது கடினமான விடயமாக இருப்பதால், கணகாணிப்புக்குழுவினரின் பணிகளை மீளாய்வு செய்து கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை, இதுவரை காலமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவராக பதவி வகித்து வந்த ட்ரைவ்வே ரெலிவ்சன்,தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் குற்றம் சாட்டப்பட்டமை குறித்து கருத்துக் கேட்ட போது அதுபற்றித் தன்னால்எதுவுங் கூற முடியாது என்றும் அது தனது பணியும் அல்ல என்றும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அமைப்பை அதிகார பூர்வமற்ற முறையில் ஏற்றுக்கொள்ளும் திட்டம் எதுவும் தங்களுக்கு இருக்கின்றதா எனக்கேட்ட போது, இது ஒரு சிக்கலான பிரச்சினையாக இருப்பதால் இது குறித்து அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் கலந்தாலோசித்தபின்னரே முடிவெடுக்க முடியும எனத்தெரிவித்தார். (உ-62,10)

# இந்திய வம்சாவழியினரின் பிரதிநிதித்துவம் தேர்தலில் உறுதிப்படுத்தப்படவேண்டும்

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்து

(கொழும்பு)

இந்திய வம்சாவழி மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையிலான புதிய தேர்தல் முறையொன்று அவசியமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறு இல்லையெனில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறையே சிறந்தது என அக்கட்சி கூறுகிறது.

தேர்தல முறையை மறுசீரமைப்புச் செய்து அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும் முகமாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு முன்னிலையில் கருத்துத் தெரிவிக்கும் போதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி இவ்வாறு தெரிவித்துள்ளது.

இத் தெரிவுக்குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ்குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி கட்சியின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் உட்பட பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் கருத்துத் தெரிவிக்கையில்,

தேர்தல்முறை தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழ முன்னிலையில் எமது கட்சி தொடர்பான நிலைப்பாட்டை விளக்கியுள்ளோம்.

அதாவது, இன்று நடைமுறையில் இருப்பது போன்று விகிதாசாரத் தேர்தல் முறை தொடர்ந்தும் அமுலில் இருக்கவேண்டும். அதே வேளை விருப்பு வாக்குகளை கட்சியின் மூலம் தெரிவுசெய்யலாம்.

தேர்தல் தொகுதிகளை வரையறை செய்யும் போது சிறுபான்மை இனமக்களின் பிரதிநிதித்துவத்தினை உறுதிசெய்யும் வகையில் அவை இருக்கவேண்டும்.

தேர்தல் காலத்தில் அடையாள அட்டைகளை காண்பிக்குமாறு நிர்ப்பந்திப்பது தவறாகும். இந்த நாட்டில் அனைத்து இனமக்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்கியபின்னர் தான் இதனை நடை முறைப்படுத்துவது சாத்தி

# வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது

## சரத் அமுனுகம குற்றச்சாட்டு

(கொழும்பு)

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தவறிவிட்டது என பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தில் வற்வரியில் செய்யப்

இதற்கமைய சமையல் வாயு, மின்சாரக் கட்டணம் ஆகியவற்றின் விலை அதிகரிப்புடன்சகல பாவனைப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

வர்த்தகர்கள் அதிக இலாபம் ஈட்டுகிறார்கள் என்று கூறுவதன் மூலம் அரசாங்கம் அதன் பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட முடியாது.

இதற்கான மாற்று யோசனைகளையும், தீர்வுத் திட்டங்களையும் அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

ஆனாலும், நாட்டில் உள்ள வர்த்தகர்கள் சிலர் அரசின் திட்டங்களுக்கு சார்பாக நடந்து கொள்

## வைத்தியசாலையில சிரமதானம்

(பொன்னாலை)

கேணல் கிட்டுவின் 11 வது நினைவு தினத்தை முன்னிட்டு சங்கானை அரசினர் வைத்திய சாலையில் கடந்த திங்களன்று சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

மேற்படி சிரமதான நிகழ்வுகளை சங்கானைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையும் அதன் கீழ் அடங்கும் ஊரகக் கிளைகளும் ஏற்பாடு செய்திருந்தன.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர்கள், சங்கானை பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக்கிளை ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என ஏராளமானோர் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (உ-49)

## அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற வருவோர் தொகை அதிகரிப்பு

### வைத்திய அதிகாரி விமலேந்திரன் தெரிவிப்பு

(நவக்கிரி)

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் நோயாளர் தொகை அதிகரித்து வருவதாக வைத்திய அதிகாரி எஸ்.விமலேந்திரன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நவம்பரில் 4 ஆயிரத்து 450ஆகக் காணப்பட்ட வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றவாகளின் எண்ணிக்கை, டிசம்பர் மாதத்தில் 5 ஆயிரத்து 82ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள். வைரஸ் காய்ச்சல் மற்றும சாதாரண காய்ச்சல் என்பன இக்காலப் பகுதியில் வேகமாகப் பரவியதை அவதானிக்க முடிந்தது.

இந்தவகையில், மேற்படி மாதங்களில் முறையே 359, 667பேர் இக் காய்ச்சல்களினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் மாதத்தில் 247 பேரும் நவம்பர் மாதத்தில் 347 பேரும் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இது தவிர, வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட 100 பேர் கடந்த டிசம்பரில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தற்போது செங்கண்மாரி நோய்க்குச் சிகிச்சை பெறவருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இனிவருங்காலத்தில் கிராமப் புறங்களில் இத்தொகை அதிகரிக்க வாய்பபுக்கள் உள்ளன என மேலும் குறிப்பிட்டார். (உ-233)

## ஸ்ரீ.சு.க - ஜே.வி.பி. கூட்டு டக்ளஸ் தேவானந்தா பாராட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்படுவதை விரைவு படுத்தும் ஒரு செயறபாடாக, பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் படுவதை மனப்பூர்வமாக வரவேற்று பூரண ஆதரவு தெரிவிக்கின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.என. டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு

யிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசியல் அமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்கி இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை நிரத்தரமாகக் காணவேண்டும் என்பதைத தொடர்ந்து வலியுறுத்தி வருவது நாம் அறிந்ததே. இந்த நிலைப்பாட்டிற்கு ஒத்திசைவாக செயற்பட மக்கள் விடுதலை முன்னணி முன்வருவது வரவேற்புக்கும், பாராட்டுக்கும் உரியதாகும்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தில் வற்வரியில் செய்யப்பட்ட மாற்றம் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

ஆனாலும், நாட்டில் உள்ள வர்த்தகர்கள் சிலர் அரசின் திட்டங்களுக்கு சார்பாக நடந்து கொள்கிறார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டினார். (தி-60)

நாட்டில் அனைத்து இனமக்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்கியபின்னர் தான் இதனை நடைமுறைப்படுத்துவது சாத்தியப்படும் எனவும் ஆலோசனை கூறியுள்ளோம் என்றார். (தி-60)

பூரண ஆதரவு தெரிவிக்கின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.என. டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் மிக முக்கியமான தேசியப் பிரச்சினை இனப்பிரச்சினை என்பதை அனைவரும் நன்கு அறிவர் இதற்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியது அவசியம் என்பதையும் அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமை

பாட்டிற்கு ஒத்திசைவாக செயற்பட மக்கள் விடுதலை முன்னணி முன்வருவது வரவேற்புக்கும், பாராட்டுக்கும் உரியதாகும்.

உண்மையான நிலைப்பாடுகளை பகுத்தாராய்ந்து முடிவுகளை மேற்கொள்ளாமல் மேல் எழுந்தவாரியான ஊகங்களின் அடிப்படையில் மட்டும் அரசியல் கணிப்பீடுகளை மேற்கொள்வது சரியான வழிமுறையாக அமையாது என்பதை எமது மக்கள் நன்குணரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# அடெம் கில்கிறிற் அதிரடி ஆட்டம்

# ஆஸி. அணிக்கு 344 ஓட்டங்கள

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மும்முனை ஒருநாள் சர்வதேச கிறிக்கெற் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டியில் அவுஸ்திரேலிய அணி 148 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதனை வெற்றிகொண்டுள்ளது.

இதன் மூலம் தான் விளையாடியுள்ள மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ள அவுஸ்திரேலிய அணி இந்தப் போட்டித் தொடரில் முன்னணியில் திகழ்கின்றது.

ஹோபேட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதற்கமைய சிறப்பான ஆரம்பத் துடுப்பாட்டத்தின் மூலம் அடெம் கில்கிறிஸ்டும் மத்தியூ ஹேடனும் தமக்கிடையே ஆரம்ப விக்கெற்றுக்காக 140 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். பின்னர் மத்தியூ ஹேடன் 63 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் அடெம்கில்கிறிஸ்ட் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை அதிரடியாக குவிக்கத் தொடங்கினார். ஒரு நிலையில் ஒரு நாள் சர்வதேச போட்டியில் அதிகூடிய ஓட்டச் சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் 172 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

126 பந்துகளை மட்டுமே முகம் கொடுத்து 13 பவுண்டறிகள் மற்றும் 3 சிக்சர்கள் அடங்கலாக 172 ஓட்டங்களை அடெம் கில்கிறிஸ்ட் பெற்றிருந்தது சிறப்பம்சமாகும். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 344 ஓட்டங்களை அவுஸ்திரேலிய அணி பெற்றுக் கொண்டது.

பின்னர் பதிலுக்குத் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 6 விக்கெற்றுக்களை இழந்து 196 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பில் அணித்தலைவர் கீறிஸ்ரிக் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும், உப தலைவர் டட்டானியாடைபு 44 ஓட்டங்களையும்கிளான்'. பிளவர் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத் திருந்தனர்.

இந்த மும்முனை ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில் தான் விளையாடியுள்ள மூன்று போட்டிகளிலுமே சிம்பாப்வே அணி தோல்வியைச் சந்தித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் இன்றைய அடுத்த போட்டியில் அவுஸ்திரேலிய அணியை பிறிஸ்பேனில் இந்திய அணி எதிர்த்து விளையாடவுள்ளது. (உ-68)

# வெற்றிக் கோப்பையை

# தக்கவைக்குமா றினோன் வி.க.?

இலங்கை கால்ப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் எவ்.ஏ. கிண்ண கால் பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் இந்த கால்ப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இம்முறை வடக்குக் கிழக்கு மாகாணம் உட்பட இதில் அங்கம் வகிக்கும் 127 கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

விலகல் முறையில் நடத்தப்பட்டு வரும் இந்தச் சுற்றுப்போட்டியில் அண்மையில் நடந்து முடிந்த பிறீமியர் லீக் கால்ப்பந்தாட்டப் போட்டியில் முதல் 8 இடங்களையும் தக்கவைத்துள்ள கழகங்கள் முன்னோடி கால் இறுதிப்போட்டிகளில் இருந்து விளையாடத் தகுதிபெற்றுள்ளாக இலங்கை கால்ப்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

114 போட்டிகள் நடைபெறவுள்ள இந்த எவ்.ஏ.கிண்ண கால்ப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாகவுள்ள கழகமாக றினோன் கழகம் கருதப்படுகின்றது.

2002,2003 ஆண்டுக்கான எவ்.ஏ.கிண்ண காலப்பந்தாட்ட இறுதிப் போட்டியிலும் விமானப் படைக் கழகத்தை 1:0 என்ற கோள் கணக்கில் வெற்றிகொண்டிருநத நடப்புச் சம்பியனான றினோன் கழகம் இம்முறையும் கோப்பையை தக்கவைத் துக்கொள்ளுமா? என பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

(உ-68)

பொ. சன நூலகம் யாழ்ப்பாணம்

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான ஆகஸ்ட் மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## இடபம்



**கார்த்திகை 2,3,4 வது பாதங்கள்-ரோகிணி 4 பாதங்கள்-மிருகசீரிடம் 1,2,பாதங்கள் வரை-9 பாதங்கள்**

உங்கள் குடும்பத்தில் இருக்கும் சனியுடன் சுக்ரன் செயற்கை சுகத்தில் செவ்வாய் 5இல் குரு குடும்பத்தில் எல்லாவகையும் இதமாக இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இட மாற்றம் இருக்கிறது. கலைப்பிரிவு மனிதர்களுக்கு புதுப்புது நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, சிலர் ஒப்பந்தம் செய்வதும் உண்டாகும். இப்பிரிவு மாணவ, மாணவியர்களுக்கு சிறப்புக் கல்வி உண்டாகும். சிலர் அயல்நாடு செல்வதும் கூட முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். செய்தொழிலில் மற்றவர் குறுக்கீடு மனச்சலனத்தை உண்டாக்கும் இதனால் உடனிருப்பவர் அல்லது கூட்டு மனிதர்களிடம் கருத்து மோதல் இருக்கும் பண நெருக்கடி இருக்கமுடியாது. அவை இயல்பாக இருக்கின்றன. உறவினர் தொடர்பும் திருப்தியானதே. பிரயாணம் முக்கியம வாய்ந்ததாக இருக்கும். பழைய கட்டடம் வாங்குவது அல்லது ஒப்பந்தம் செய்வதும் இருக்கும். தொழில் சம்பந்தமான அலைச்சல் குறையாது. சிலர் தூரதேச மனிதர்களைச் சந்திப பதும் உண்டாகும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிக் குரியதாக இருக்கும். உத்தியோகப் பிரிவினருக்கு மேன் மையை உண்டாக்கும். பிற்பகுதியில் ஆரம்பத்தில் இருந்த மந்தநிலை அகன்றுவிடும். தொழில்வகையில் நீங்கள் துரிதப போக்கில் இயங்குவதும் உண்டு. உங்கள் கூட்டாளிகளோ மற்றவரோ பொறாமைப்படத்தான் செய்வர். நீங்கள் கௌர வத்தை பார்ப்பதோடு பண விஷயத்தையும் கவனிக்க வேண்டும். உத்தியோகப் பிரிவினர்களும் துரிதப்போக்கில் இயங்குவது மற்றவர் பாராட்ட அமையும் இப்போது பழைய கடனில் ஒருபகுதி அடைக்கப்படுவதும் இருக்கும். புதுக்கடனும் வந்து சேரும். கலைத்துறையினருக்கு பொறுப்புகள் மிகுந்த காலமே. முதலீடு செய்வதில் சில மூத்தவர்கள் ஆலோசனை இப்போது தேவைப்படுகிறது. இதனால் அடிக்கடி பிரயாணம செய்வதும் இருக்கும். அவசர காரியங்களை முடித்துவிடுவீர் கள். கணவன், மனைவி உறவு சிறுசிறு பூசல்கள் இருந்தும் இனபமாக இருக்கும் பணப்புழக்கம் திருப்தியாக இருக்கின்றன. பழைய வாகனம் இதரபொருள்களும் வாங்கும் மாதம். பெண்களுக்கு பட்டு உடைகள் சேர்க்கையும் உண்டாகும். உத்தியோகப் பிரிவினருக்கு இடமாற்றம் இலாகா மாற்றம் போன்றவை உண்டாகும் மனத்திருப்தி அளிக்கும் காலமே. புண்ணியஸ தல பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கும். சிலர் இடம் மாறுதல், செய்து தொழில் அமைத்தல், கூட்டு முயற்சியில் ஆதாயமும் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் மிதமான போக்குத்தான் இருக்கும். பழைய நண்பர்களைச் சந்தித்து, புதிய திட்டங்களைப்பற்றி விளக்கு வது அவசியமாக இருக்கும. தொழில் உயர்வு உண்டு. உறவினர்களும், நண்பர்களும் பாராட்டாமல் இருக்க முடி யாது. பழைய கட்டடத்தைப் புதுப்பித்தல், புதிய கட்டடம் கட்டி முடித்தல் போன்றவையும் இருக்கும். சிலர் இப்போது அயல்நாடு சென்று வருதல் அதிநாகரிக பொருள்களை கொண்டு வருவது போன்றவையும் இருக்கும் அரசாங்க மூலமாக எழுத்துவகை ஆதாரம் மட்டும் கிடைக்க சற்று காலதாமதம் ஆகலாம். இப்போது சனி 12இல் இருப்பதே இதற்குக் காரணமாக அமைந்து விட்டது என்பது கவனிக்கவேண்டிய ஒன்று. இப்பிரிவு உத்தியோக ஆண், பெண்களுக்கு உபகை அளிக்கும் சில நற்பலன்களும் உண்டு. அவை காதல், கல்யாண வழியில் வெற்றியடைவது என்பதுதான். இப்போது சில நல்ல நண்பரையும் பெறுவீர்கள்.

மட்ட மனிதர்கள் சந்திப்பு அவசியமாகும். உங்கள் மூலம் மூன்றாவது மனிதர்களுக்கு சில நன்மைகள் உண்டாகும். கடன், வழக்கு சத்துருக்கள் பலம்கிட்டும். புதிதாக உத்தி யோகம், பதவிப்பொறுப்பு எற்பவர்களுக்கு வேறு இடம் மாறுதல் என்பது உடனே இருக்கும். குடும்பத்தொழில் சம்பந்தமான வகையில் இருந்து வந்த வழக்கு, இதர சிக்கல்களையும் ஒரு நன்முடிவுக்கு கொண்டுவரும் காலம் இது. கிரகங்களுக்கு சாரபலம் உங்களுக்கு அனுகூல்மாக இருப்பதால், நங்கள் நினைத்தபடியே அவர்களும் இணங்கி வருவர். எழுத்து மூலம் நன்மை ஒப்பந்தம் போன்றவை திருப்தியானதே. சிலர் அயல் நாடு செல்வது, அவசர

கவனிக்கவேண்டும். சிறுகாயம் ஏற்பட்டு சிகிச்சையும் உண்டாகலாம். புத்திரர்கள், புத்திரியர்களாலும் திருப்தி யானபோக்கு இருக்காது. மற்றவர்கள் கௌரவக்குறை வான பேச்சுக்கு இடம் உண்டாகும். என்பதையும் மறக்க வேண்டாம் கடந்து போனது எனவிடப்பட்டவை சில இப் போது உங்கள் கவனத்தை கவருவதாக இருக்கும். விட்டுப் போன தொடர்பு அருகில்வரும். போட்டி, பந்தையம், நல்லவர் களைச் சந்திப்பது, நல்லவற்றையே செய்வதும் இருக்கும் புகழ் மிக்க மனிதர்களின் தொடர்பு நெருங்கியதாக இருக் கும். செய்தொழில்வழி சிறப்பான போக்கு உடையதுதான். ஆனால் சில பழையபாதிப்புகள் உங்களை பயமுறுத்து வதுபோல் இருக்கும். பாதித்துவிடவும் முடியாது. பணம் கொடுக்கல், வாங்கல் உங்கள் பண்பை உயர்த்தக் கூடியதே. இந்தநேரத்தில் பழைய கடனில் ஒருபகுதி அடைப்பதும் உண்டாகும். தொழிலில் இருந்த போட்டி யாளர்களை இப்போது காணவில்லை. சிலருக்கு இப்போது அரசியல் கௌரவப் பதவியும் வந்துசேரும் நாகரிக வாகனம் வாங்குவது, இல்லத்தை அழகுபடுத்துவது போன்றவகை செலவுகள் முக்கிய இடம் பெறும். மற்றும் சில புதுவகை

# உங்களுக்கு எப்படி?

பிரச்சினையாக அரசாங்க மனிதர்களைச் சந்திப்பது உண் டாகும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். தொழில்வழி இடம் மாறுதல் இப்போது சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும். பிரயாணம் மேற்கொள்வது திருப்தி யாகஇருக்கும். கடமைசெய்யத்தடை இருக்கின்றன. கவனமறதி, மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை என் பது அதிகமாக இருக்கிறது. இதனால் உரிய காலத்தில் உரியதைச் செய்யமுடியாது. எழுத்து ஒப்பந்தம் போன்ற வையும் ஒப்பந்தத் தொழில் உள்ளவர்களுக்கு சிக்கலாகவே இருக்கும். உங்கள் அவசரத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகிவிடும்.

## கடகம்



**புனர்பூசம் 4வது பாதம் - பூசம் 4 பாதங்கள் - ஆயிலியம் 4 பாதங்கள் வரை - 9 பாதங்கள்**

ஏதோ ஒருவகையான அச்ச உணர்வை ஏற்படுத்துகிறது. வழக்கு கட்டுப்பட்டது அல்ல. முயன்றும் நல்ல போக்கை விரும்பியும், அவர்கள் ஒன்றுபட்டு வரவில்லை. இதரவழக்கு இருந்தாலும் அப்படியே இழுத்துக்கொண்டு போகும் ஒரு முடிவுக்கு கொண்டுவர முடியாது. உறவினர்கள் விலகித்தான் இருப்பர். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்குத் தன் தொழில் பிரச்சினை சுமுகமாகி இருக்கின்றன. விரோதியாக இருந்த சகஊழியரே இப்போது உங்கள் அருகில் நெருங்கி இருக்கின்றனர். பிறர் கூறும் அவதூறு வார்த தைகள் குறித்து கவலைப்படவேண்டாம். பண வரவு ஓர் அளவு திருப்தியாகவும் தொழில் முறை ஓரே சீராகவும் இருக்கின்றன. குடும்பத்தில் இடையிடையே மருந்துச் செலவுகள் உண்டாகிக்கொண்டே இருக்கும். புது உடைகள தைப்பது, ஆபரணமாற்றம் செய்வதால் பெண்களுக்கு அவசரசெலவும் இருக்கிறது. சில்வழி பண வரவு பற்றாக்குறையைப் போக்கும் என்பதுடன், மூன்றாவது மனிதர்களது தனமும் உங்களிடம் புழங்கும் அளவு நிறைந்த சூழ்நிலை உருவாகும். தொழில்வகையில் மங்கி யிருந்த நிலை மறைந்துவிட்டது. உங்கள் செயலை உறவினர்களும், நண்பர்களும் புகழ்வர். தேகசுகம் கருதி செலவுகள் தவிர்க்கமுடியாது. நண்பர் இல்லம் சென்று சுபவிரயமும் இருக்கிறது. 7ஆம் இடத்து சனியைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். பழைய கடன்கள் குறைந்த பாடில்லையே என பயம்வேண்டாம். அவை கட்டுப்பட்டு இருக்கும். சகோதர, சகோதரிகளின் முன்னேற்றம் சந் தோஷத்தை உண்டாக்கும். நேர்மைத் தொழில்வழி முயற்சிக்கு மூன்றாவது மனிதர்களும், உறவினர்களும் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். தொழில்வழி தனம், கொடுக்கல், வாங்கல் திருப்தியான அம்சத்தில் தான் இருக்கின்றன. குடும்பத்தில் காலம் கடந்த பிரச்சினை

செலவுகள் முக்கிய இடம்பெறும். மற்றும் சிலருக்கு புதுவகை செலவுகளான புதுஇல்லம் குடி புகுவது விருந்தி னர் செலவையும் ஏற்பது ஆகியவை இருக்கும். இல்லறம் நல்லறமாக விளங்கும். பிரயாணமும் உங்களைவிடாது. கடன் வழக்கு போன்றவை கட்டுக்கடங்கி இருந்தாலும் கடைசியில் பற்றாக்குறை இருக்கவேசெய்யும். பழைய நண்பர்கள் சிலரைச் சந்திப்பதால் புதிய பிரச்சினைகளை தீர்க்கவழி பிறக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண் களுக்கு கவனமறதியினால் தவறு எற்படுவது, மேல் அதிகாரிகள் சீற்றத்திற்கும், வாக்கு வாதத்திற்கும் ஆளாகு தல் போன்றவை உண்டாகும். குழந்தைகள் வகை சிறு மருத்துவச் செலவு இருக்கிறது. கலைப்பிரிவினர்களுக்கு சில கவர்ச்சியான ஒப்பந்தம் இருக்கிறது. உங்களுக்கு அலைச்சல் இருக்கிறது. பணச் செலவும் கூட இருக்கிறது. சிலர் அயல்நாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. தொழில் வகை புதிய கூட்டு முயற்சி சிறப்புடையதாக அமைந்திருக்கும். பிரயாண அலைச்சல் உள்ள காலம். செலவுகள் குடும்ப வகையில் மட்டுமன்றி வெளிவட்டாரத்திலும் அதிகமே. சிலர் வாகன வகையில் செலவழிக்கவேண்டிய காலம் இது. உங்களுக்கு இருந்து வநத வழக்கு என்னவாயிற்று என்பது கேள்வியாக இருக்கும். அரசாங்க மனிதர்கள் முதல் அரசியல் மனிதர்கள்வரை உங்கள அவசரகாரியங்களுக்கு உதவியாக இருப்பர் என்பது கண்கூடாக நன்மைகளையளிக்கும்.

## கன்னி




**உத்திரம் 2,3,4 வது பாதம் வரை - அத்தம் 4 பாதங்கள் - சித்திரை 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

இப்போது குரு ஜன்மத்துக்கு வந்து விட்டான். சுக்கிரனும், சனியும் பத்தில், இலாபவீட்டில் சூரியனும், புதனும் காரிய சாதனையைப் புரிய வேண்டி இருக்கிறது. தொழில் இடமாற்றம் தூரத்துச் செய்தி அவ்வளவு திருப்தியாக இல்லை. அரசியல், அரசாங்க சம்பந்தமான மனிதர்களின் சந்திப்பு. எழுத்து வகை உத்தரவுக்கு உதவியாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டுப் போன்ற வழிகள் அரைபலிதம் உடைய தாக்கும். கணவன், மனைவி, குழந்தைகள் மருத்துவச் செலவு உங்களை விடாது. வெற்றிமேல் வெற்றி இருக்கி றது. பதவி மாற்றம் இடமாறுதலும் குறிப்பிடத்தக்கது. தனம் கொடுக்கல் வாங்கலில் தன் நிறைவு இருக்கிறது. புது உடைகள் சேர்க்கையும், கௌரவச் செலவும் இருக் கிறது. பதவிமாற்றம், இடமாறுதலும் குறிப்பிடத்தக்கது. புத்திர, புத்திரியர்கள் நிலையில் பெருத்த முன்னேற்றத் தைக் காணும் காலம். சுபவிஷயம் குறித்து கடிதங்களும் வாழ்த்துக்களும் வரும். பிரயாணம் குடும்பத்துடன் ஏற்பது தவிர்க்கமுடியவில்லை. தொழில் முன்னேற்றம் குடும்ப

உபகை அளிக்கும் சில நற்பலன்களும் உண்டு. அவை காதல், கல்யாண வழியில் வெற்றியடைவது என்பதுதான். இப்போது சில நல்ல நண்பரையும் பெறுவீர்கள்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4,வது பாதங்கள்-திருவாதிரை 4 பாதங்கள்-புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை 9-பாதங்கள்.**

உங்கள் சுக இல்லத்து குருமாறிவிடடான். சூரியனும், புதன் மட்டில்தான இல்லத்தில் வீற்றிருக்க பெரியவர்கள் கருந்து வேறுபாட்டிற்கும் இடம் இருக்கிறது. வழக்கோ, கடன் விஷயமோ கட்டுப்பட்டு இல்லை. அலைச்சலும் செலவும் உடையதுதான் உங்களுக்கு கூட்டு மனிதர்கள் இருப்பின் கணக்குவகையினை சரிக்கட்ட முயற்சிகள் தேவை. குடும்பத்தில் ஏற்படும் செலவும், இதர வெளிவட்டாரச் செலவும் கௌரவப்பிரச்சினையாக முடியும். இரு குடும்பம் உள்ளவர்கள் மூன்றாவது மனிதர்களின் முடிவை ஏற்கவேண்டி வரும். குழந்தைகள், மனைவி இந்த வகையில் சிறுசிறு சச்சரவுகள் இடம்பெறும் தெய்வ வழிபாடே மன அமைதியை உண்டாக்கும். கலைத்துறையினர்கள் சில ஒப்பந்தம் எழுத்து வகையில் எதிர்பார்க்கும் நன்மைகள் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும் இதற்கு நண்பர்களின் முட்டுக்கட்டையே காரணமாக இருக்கும். சில சமயம் இவை வழக்காகவும் உருவெடுக்கலாம். மேற்பகுதிக்கு மனிதர்களின் வருகை பேச்சுவகையில் திருப்தியளிக்கும். உத்தியோகப் பிரிவினர்கள் தொழிலாளர்களுக்கு இது சோதனையான காலமாகும். கலைப்பிரிவு ஆண், பெண்கள் மிகவும் கவனமாக இருந்தும் சிலவகையில் ஏமாற்றத்தை உண்டாக்கிவிடும். உடன் இருந்தவர்கள் மூலம் உத்தியோகத்துறையில் நல்ல வாய்புகள் இருக்கின்றன. உறவினர் சந்திப்பு, மகிழ்ச்சியான செய்தி அறிதலும் இருக்கும். பழையநண்பர்கள் சிலரை சந்திப்பதில் தனி அக்கரை காட்டவேண்டி இருக்கும். குடும்பசொத்து விவகாரத்தில் நல்ல திருப்பத்தை காணலாம். போட்டி, பந்தயம், விளையாட்டுப் போன்றவழிகள் பிரகாசமாகவே இருக்கின்றன. பெரியமனிதர்கள் அரசாங்க உயர் முயற்சிக்கு மூன்றாவது மனிதர்களும், உறவினர்களும் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். தொழில்வழி தனம், கொடுக்கல், வாங்கல் திருப்தியான அம்சத்தில் தான் இருக்கின்றன. குடும்பத்தில் காலம் கடந்த பிரச்சினைகளையும் நடைமுறைக்குக் கொண்டுவருவது உங்கள் சிறப்புத் தன்மையை வெளிப்படுத்தும். நண்பர் அல்லது உறவினர் இல்லங்களில் குடும்பத்துடன் சேர்ந்து விருந்துண்பதும் உண்டாகும். கவனமறதி அடிக்கடி உண்டாக்கவல்லது. பிரயாணம் எதிர்பார்த்தபடியில்லை இடையூறுகள் இருக்கும் எழுத்து ஒப்பந்தம் போன்ற வழிகள் ஒப்பந்தத் தொழில் செய்பவர்களுக்கு மந்தமானது. செலவழித்தாலும் சாதனை குறைவுதான். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு நம்பிக்கை வளரும். நல்ல சூழ்நிலை உருவாகும். உத்தி யோகஸ்தர்களுக்கு மட்டும் பெரும் நன்மையெனக் கூறமுடியாது. முன்பு ஏற்பட்ட சிக்கலைப் போக்க முக்கியஸ்தர்கள் சந்திப்பு உதவியாக இருக்கும். பழைய நண்பர்கள் சிலர் இப்போது பக்கபலமாக இருப்பர். தொழில் சீராக இருக்கும் தன ஆதாயமும் சுபச்செலவுகளும் உங்களையும் விடாது. உங்கள் ஆரோக்கியத்திலும் மிகவும் கவனம் எடுத்துக்கொள்வது அவசியம். உடல் உஷ்ணப்பிணி, உளைச்சல போன்றவை தொடரவாய்ப்புண்டு. பணப்பொறுபபில் உள்ளவர்கள் மேல்மட்ட மனிதர்களிடம் முன்யோசனையுடன் நடந்துகொள்ளவேண்டும்.

## சிம்மம்



**மகம் 4 பாதங்கள் - பூரம் 4 பாதங்கள்-உத்தரம் 1வது பாதம் வரை - 9 பாதங்கள்**

உங்கள் விரையத்தில் சேர்ந்திருக்கும் சூரியுனும் புதன், ஜன்ம செவ்வாயினால நன்மை இல்லையே என்றாலும், குடும்பத்துக்கு குரு மாறிவிட்டான் என்பதால் உங்கள் தொழிலுக்கு ஊக்கம் தானே உதயமாகும் காலம் இது. வெளியூர் செய்திகள் எதிர்பார்த்தவைக்கு நேர்மாறானவை என்றாலும் காரியச் சாதனை உங்கள் பக்கம் இருக்கிறது. குடும்பத்தில் சொத்து விவகாரம் என்பது சிலருக்கு அதிகமாகவே இருக்கும். இதன் மூலம் மனஉளைச்சல் இருந்தாலும் பாதிப்பு ஏதும் இல்லை. நீங்கள் இப்போது பாதத்தையும் புத்திர, புத்திரியர்கள் நிலையில் பெருத்த முன்னேற்றத்தைக் காணும் காலம். சுபவிஷயம் குறித்து கடிதங்களும் வாழ்த்துக்களும் வரும். பிரயாணம் குடும்பத்துடன் ஏற்பது தவிர்க்கமுடியவில்லை. தொழில் முன்னேற்றம் குடும்ப தேவைகளைப் பூர்த்தி செய்வதும் உண்டாகும். பழைய நண்பர்கள் சிலர் உங்களை புதிய முயற்சிக்கு ஊக்கமளிப்பவர்களாக இருப்பர். பெண்கள், குழந்தைகளுக்கும் புது உடைகள் செயற்கை நாகரிகப் பொருட்கள் குடும்பத்திற்கு செயற்கையும் நடுப்பகுதிக்கு மேல் வந்து சேரும் உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் அதிகாரிகளால் குறை கூறப்படுதல் மனச் சலனமான போக்கும் இருந்து படிப்படியே குறைந்து வரும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு வேகம் மிக்க வேலைகள் மிகுந்துவிட்டன. மங்கியிருந்த சூழ்நிலை மறைந்துவிட்டபடியினால் புதிய கருத்து உதயமாகுதல். நினைத்தபடி தனவரவும், தொழில் வகை நம்பிக்கையை அதிகரிக்கும். வாகனம் வாங்குவது அல்லது மாற்றியமைப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கடன், வழக்கு வகை பாதிக்கமுடியாத நேரம் இது. எழுத்து ஒப்பந்தம் போன்ற சிறுசிறு நன்மைகளும் இருக்கத் தான்செய்யும். நடுப்பகுதிக்குமேல் உங்கள் குடும்பம் கலகலப்பாக இருக்கும். கணவன், மனைவிக்குள் அன்னியோன்னியம் மிகுந்து காணப்படும். மனைவியின் உடல் ஆரோக்கியம் சுமார். புத்திர, புத்திரியர்களால் சற்றுக் கவலை ஏற்படும். மாணவ, மாணவிகளுக்கு சாதாரண காலம் தான். சொன்னசொல்லைக் காப்பாற்றி எல்லோருடைய நன்மதிப்பையும் பெறுவீர்கள். காசுகொடுத்து ஆகவேண்டிய காரியங்களை பேச்சு புத்திசாதுரியத்தினால் முடித்து நல்லபெயரைப் பெறுவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கும் பெரிய வெற்றியைத் தேடித்தரப்போகின் றது. என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நினைத்த காரியங் கள் நினைத்தபடி முடியும். தூரவிலகிச் சென்றவர்களும் ஒட்டி உறவாடி வருவார்கள். பெரிய மனிதர்களின் தொடர்பும் அவர்களின் மூலம் சிலருக்கு காதல், கல்யாணப் பிரச்சினைகள் கூடிவந்து தடைப்படுவதால் மனச் சலனம் இருக்கும். இது குடும்பவகையிலும் கசப்பான சூழ்நிலைக்கு காரணமாக இருக்கும். (தொடரும்)

**சோதிடமேதை ராமன்**

# கிளர்ச்சியாளர்களின நடவடிக்கைகளை எதிர்கொள்ள அமெரிக்கப்படை தயார்

## வெள்ளை மாளிகை அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின் அமெரிக்க எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளை எதிர்கொள்ள அமெரிக்கா தயாராகியிருப்பதாக வெள்ளை மாளிகை நேற்று அறிவித்துள்ளது.

அததுடன், ஈராக்கின் அரசியல் அதிகாரங்களை அந்த நாட்டுக்குக் கையளிக்கும் வகையில் யூலை 1ஆம் திகதி நேரடித் தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்த வேண்டுகோளை நிராகரித்துள்ள வெள்ளை மாளிகை அது சாத்தியமற்ற விடயம் எனவும் தெரிவித்துள்ளது.

ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல்பிறிம், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷுடன் கலந்தாலோசித்த பின்னரே, 2005 ஆம ஆண்டில் ஈராக்கில் நேரடி மக்கள் தேர்தல் ஒன்றை நிகழ்த்தும் வாய்ப்பு உண்டென வெள்ளை மாளிகையின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் ஈராக்கில் விரைவில் தேர்தல் நடத்தும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய குழு ஒன்றை அங்கு அனுப்பி வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து-9)

## காவிரி தண்ணீரைத் திறந்து விட கர்நாடக முதல்வர் உறுதி

(சென்னை)

காவிரி டெல்டாப் பகுதியில் தண்ணீர் இலலாமல்வாடும் சம்பாப் பயிரைக் காப்பாற்ற தன்னால் இயன்ற அளவு உதவ முயற்சிப்பதாக கர்நாடக முதலமைச்சர் எஸ். என். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு விவசாயிகள் நலன் அமைப்புச் சங்கப்பிரதிநிதிகள் அவரைச் சந்தித்து காவிரித் தண்ணரை திறந்துவிட வேண்டும் என்ற கோரிக்கை மனுவைச் சமர்ப்பித்த போது அவர் இந்த உறுதி மொழியை அளித்ததாக விவசாயிகள் சங்கச் செயலாளர் காந்திப்பித்தன் திருச்சியில் செய்தியாளர்களிடம் இதனைக் கூறினார். (து)

# மியன்மார் அரசாங்கத்துடன் ஹரணி அமைப்பினர் பேச்சு

(ரங்கூன்)

மியன்மார் நாட்டின் மிகப் பெரிய தீவிரவாத அமைப்பான ஹரணி தேசிய கூட்டமைப்பினர் அந்த நாட்டு அரசுடனான பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தலைநகர் ரங்கூனுக்கு விஜயம் செய்துள்ளனர்.

இக்கூட்டமைப்பினர் அரைநூற்றாணடு காலமாக ஹரணி இன மக்களின் தனிநாட்டு உரிமைக்காக போராடி வருகின்றனர்.

1989ஆம் ஆண்டில் இருந்து இது வரையிலும் 17 தீவிரவாத அமைப்புடன பேச்சுவார்த்தை நடத்தியிருக்கும் மியன்மார் இராணுவ அரசு இப்போது தான் முதன்முறையாக ஹரணி தேசியக் கூட்டமைப்பினருடன் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு வந்துள்ளது.

ஹரணி இனத் தலைவர்கள் தாய்லாந்து, மியன்மார் எல்லைப் பிரதேசத்தில் ஹரணி இன மக்களுக்கான நிலப்பரப்பை அங்கீகரிக்க வேண்டுமென கோரியுள்ளனர்.


மியன்மார் அரசு பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் பிரச்சினை தீர்க்கப்படும் காலக்கெடு குறித்து திட்டவட்டமான பதில் எதனையும் சொல்லாமல் காலம் கடத்தி வருவதாக ஹரணி அமைப்பினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (து-2)

## குண்டுத்தாக்குதலில் மூவர் பலி

(காத்மண்டு)

நேபாள மாவோ தீவிரவாதிகள மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் பேருந்து ஒன்றில் பயணம் செய்த படைவீரர் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

காத்மண்டு கிழக்குப்புறத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (து-9)



கடந்த 2ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்திய பாகிஸ்தான் ரயில் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து இந்தியாவிலிருந்து லாகூரைச் சென்றடைந்த ரயிலுக்கு பாகிஸ்தான் படையினர் பாதுகாப்பு அளிக்கின்றனர்.

# ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் உயிரிழப்புக்கள் பயனுள்ளதா ?

## உலக மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்

(பக்தாத்)

ஈராக்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் இதுவரை 500ற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இவர்களின் உயிரிழப்பானது பயனுள்ளதா என்பது குறித்து உலக மக்கள் கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளதாகவும் ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராககிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு எதிராக கடந்த வருடம மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்களில் இதுவரை 493 அமெரிக்கப் படைவீரர்கள் உயிரிழந்ததுடன், 2ஆயிரத்து 490 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும், நூற்றுக்கணக்கான ஆதரவுப் படைவீரர்கள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாகவும் ரொய்ட்டர் செய்தியில் மேலும தெரிவிக்கப்படுகிறது. (து-9)

# சதாமைவிடுவிக்கும்படி ஜோர்தான் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(அம்மான்)

"ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் விடுவிக்கப்பட வேண்டும். அவரை கைது செய்த அமெரிக்க மற்றும் பிரிட்டன் வீரர்கள் கைது செய்யப்பட வேணடும்".

இவ்வாறு ஜோர்தான் சட்டத்தரணிகள் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியுள்ளது.

ஈராக்மீது அமெரிக்கக் கூட்டுப் படையினர் கடந்த ஆண்டு முற்பகுதியில் தாக்குதல் நடத்தியதில் தலைமறைவான முன்னாள் அதிபர் சதாம் கடந்த மாதம் சொந்த ஊரான திக்ரித்தில் வைத்து கைது செய்யபட்டார்.

அத்துடன், அவரைப் போர்க்கைதியாக அமெரிக்க நிர்வாகம் அறிவித்துள்ளது. இதற்கிடையே ஜோர்தான் சட்டத்தரணிகள் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்

களின் ஒப்புதல் இன்றி ஈராக்கில் அத்துமீறி நுழைந்து அந்நாட்டு அரசைக்கவிழ்த்து ஏராளமான அப்பாவி மக்களைக் கொன்றுள்ளனர்.

அமெரிக்க மற்றும் பிரிட்டன் வீரர்கள் சதாம் ஹுசைனின் இருப்பிடம் அருகே பதுங்கியிருந்து அவரைக் கைது செய்துள்ளனர்.

அத்துடன், அவரைப் போர்க் கைதியாக அமெரிக்க நிர்வாகம் அறிவித்துள்ளது. இது நியாயமில்லாதது. எனவே, அவரை உடன் விடுவிக்க வேண்டும் என்றும் வேற்று நாட்டின் மீது அத்துமீறி நுழைந்து உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஈராக் தலைவரை பிடித்து வைத்துள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டன் படையினரை தீவிரவாதிகளாக அறிவித்து அவர்களைக் கைது செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து-2)




# பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்தியா குறைத்துக்கொள்ளாது

## துணைப் பிரதமர் அத்வானி அறிவிப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் சுமுகமான உறவுகள் ஏற்பட்டுள்ள போதிலும் இந்தியா தனது பாதுகாப்பு நடவடிககைகளை குறைத்துக் கொள்ளாது என துணைப் பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

புதுடில்லியில் அனைத்து மாநிலத் தலைமைச் செயலாளர்கள் மற்றும் காவல்துறைத் தலைவர்கள ஆகியோருடன் நடைபெற்ற மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித தார்.



எல்லைப் பகுதிகளில் இடம்பெற்றிருந்த போதிலும் சில மாதங்களாக அவை குறைந்தே காணப்படுகின்றன என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இம்மாதம் 6 ஆம் திகதி இஸ்லாமபாத்தில் வெளியிடப்பட்ட இந்திய பாகிஸ்தான் கூட்டறிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறிய துணைப் பிரதமர் நாட்


லேயே அவர் இவ்வாறு தெரிவித தார்.

எல்லை தாண்டிய பயங்கரவாத மும தீவிரவாதிகளின் ஊடுருவலும் பல ஆண்டுகளாக ஜம்மு- காஷ்மீர்

லாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறிய துணைப் பிரதமர் நாட்டின் பாதுகாப்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படும் என்றார். (து)

வித்துள்ளது. இதற்கிடையே ஜோர்தான் சட்டத்தரணிகள் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில, ஐக்கிய நாடு



தெற்கு ஜப்பானில் கிடாகியூவில் நடந்த தீயணைப் புப் படைப் பயிற்சியின்போது பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த ரோபோவின் மாதிரி. தீயணைப்பு மற்றும் இயற்கைச் சீற்றங்களின் போது மீட்புப் பணியில் இது ஈடுபடுத்தப்படும். மனிதர்களுக்கு உள்ளது போல் இதற்கும் 2 கைகள் உள்ளன. 1 தொன் எடை வரையிலான பொருள்களைத் தூக்கும் திறன் கொண்டது.

WORLD NEWS உலக தரிசனம்

## படகு மூழ்கியதில் 16 பேர் பலி

(மாட்ரிட்)

ஸ்பெயினுக்குச் சட்டவிரோதமாகச் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று கடலில் மூழ்கியதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இப்படகில் 16 பேருக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்திருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பாதல் மேலும் அதிகமானோர் கடலினுள் மூழ்கியிருக்கலாம் என ஸ்பெயின் நாட்டின் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் விபத்திற்குள்ளான இப்படகு எந்த நாட்டிலிருந்து ஸ்பெயினுக்குச் சென்றுகொண்டிருந்தது என்பது குறித்த விபரங்கள் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (து-9)



இந்தியா வந்துள்ள மங்கோலிய பிரதமர் நம்பரைன் என்க்பயார் மற்றும் அவரது மனைவி. இவர்களை வரவேற்கும் பிரதமர் வாஜ்பாய்.

## கொலை அச்சுறுத்தல் காரணமாக இராணுவ விடுதியிலிருந்து முஷாரப் ஜனாதிபதி மாளிகைக்கு மாறுகிறார்

(இஸ்லாமபாத்)

பாதுகாப்புக் காரணமாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப . தனது இருப்பிடத்தை மாற்றவுள்ளார்.

கடந்த மாதம் இவர் மீது குறிவைத்து இடம்பெற்ற 2 தாக்குதல்கள் காரணமாகவே தற்போது தங்கியிருக்கும் இராணுவ விடுதியிலிருந்து ஜனாதிபதி மாளிகைக்கு இடம்மாறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத் தளபதி என்ற ரீதியில் இராணுவ விடுதியில் தங்கி வந்த இவருக்குத் தொடர்ந்தும் கொலை அச்சுறுத்தல இருப்பதா கப்



புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதையடுத்தே இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார்.

அடுத்தமாதம் அல்லது அதற்கு முன்னரே இஸ்லாமாபாத்திலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முஷாரப் செல்வார் என அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (து-9)

பொ... சன நூலகம்

## தமிழ்-முஸ்லிம் மக்கள்

# ஒற்றுமையாய் வாழ ஒரே வழி வடகிழக்கில் தனித்தனி ஆட்சி

## மசூர் மௌலானா வலிறுத்து

(கொழும்பு)

**முஸ்லிம்களும் தமிழர்களும் தனித்தனியாக ஆட்சி அமைத்து வாழுவதன்மூலமே இருசமூகங்களிடையேயும் நிலவி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான மசூர் மௌலானா தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

தமிழ்பேசும் மக்கள் இலங்கையில் ஒற்றுமையாக வாழவேண்டும். அவர்களுக்கு சம உரிமை வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையுடன் அகிம்சை வழியில் போராடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியிலேயே நான் முதன் முதலாக அங்கம் வகித்தேன். அந்தக் கட்சியின் கொள்கைகளை, இலட்சியங்களை இன்றுவரை நேசிப்பதுடன் அதனைக் கடைப்பிடித்தும் வருபவன் நான்.

### தந்தைவழியில்நான்

1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்சியில் இருந்த தந்தை செல்வநாயகம், டாக்டர் நாகநாதன் மற்றும் வன்னிய சிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர்களுடன் நான் நெருங்கிப் பழகி அவர்களின் இலட்சியங்களை கடைப்பிடித்த முதல் முஸ்லிம் உறுப்பினர் என்றால் அது நானாகத்தான் இருப்பேன்.

இதுவரையும் தோன்றியிராத சிறந்த பெருமை மிக்க தமிழ் அரசியல்வாதியான தந்தை செல்வநாயகத்தின் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்றை சத்தியத்தால் செய்யவேண்டும்" என்ற புனிதமான கொள்கையை நான் இன்றுவரை நேசிக்கின்றேன்.

அனைத்து மக்களும் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்தக் கொள்கை பொருந்...

வேண்டும்.

அவ்வாறு தமிழரசுக்கட்சியின் கொள்கைகளுக்கு இன்றும் உரிய மதிப்பு அளிக்கப்படுமாயின் தமிழ்-முஸ்லிம் மக்களின் இரத்தம் சிந்தும் நிலை உருவாகாது. குறிப்பாக வன்முறைகள் உருவாக மாட்டாது.

### உரிமைக்குரல்

இதேசமயம், அந்தக் கட்சியில் நான் அங்கம் வகித்தமை மட்டுமன்றி அதில் இருந்துகொண்டே முஸ்லிம் மக்களிற்காக குரல் கொடுத்தவன். அகிம்சைப் போராட்டத்தில் இணைந்தவன்.

அதுமட்டுமன்றி, 19.08.1956 அன்று திருகோணமலையில் உள்ள முற்றவெளிப்பிரதேசத்தில் நடைபெற்ற முக்கியமான மகாநாட்டில் "சுயாட்சி தமிழரசு", "முஸ்லிம் அரசு" என்ற இரண்டு அமைப்பின் கீழ் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற எமது கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

தமிழ் பேசும் மக்களாக தமிழ்-முஸ்லிம் மக்கள் இருந்தாலும் இரு வேறு இனங்களாக தமிழரும் முஸ்லிம்களும் காணப்படுவதால் இரு தரப்புக்கும் தனித்தனியாக அபிலாஷைகள் இருக்கின்றன. அவர்களை அவர்களே ஆளவேண்டும். அதாவது ஒரு இனத்தை இன்னொரு இனம் ஆளமுடியாது. அடிமைப்படுத்த முடியாது.

இவ்விரு சமூகங்களும் தனித்தனியாக பிரிந்து தேவைக்கேற்ப ஒன்றிணையலாம். ஆனால், முஸ்லிம்களுக்கென ஓர் தனி அலகு இருக்கவேண்டும் என்பதே எமது நோக்கம். இவற்றையெல்லாம் அன்றைய தமிழரசுக்கட்சி ஏற்றுக்கொண்ட போதும், சில துரதிஷ்ட...

### கட்சி மாற்றம்

இதனால், நான் அக்கட்சியில் இருந்து விலகி ஐக்கியதேசியக் கட்சியில் சில காலம் அங்கம் வகித்து இறுதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துகொண்டேன்.

நான் கடைப்பிடித்த கொள்கைகள், தமிழரசுக் கட்சியிடம் விடுத்த கோரிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இயங்கி வருகின்றது.

இதனால் இக்கட்சியின் செயற்பாடுகளிற்கு பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் நான் வழங்கி வருகின்றேன்.

அத்துடன், தமிழரசுக்கட்சி இயங்கிய காலத்தில் முஸ்லிம்கள் சார்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடியொற்றியதாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை குறித்த இன்றைய யோசனைகள் அமைகின்றன.

இதேசமயம், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பகுதிகளை ஒன்றிணைத்து தமிழ்நாடு பாண்டிச்சேரியில் உள்ளது போன்றதோர் அமைப்பை அமைக்கவேண்டும். இல்லாது விட்டால் தென்கிழக்கு அலகு என்று சொல்லப்படுகின்ற அம்பாறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு முஸ்லிம் அரசு ஒன்றை அமைக்கவேண்டும் என்ற எமது யோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்றுக்கொண்டது.

### கூட்டணியின் நிராகரிப்பு

ஆனால் தற்போது தமிழர் விடுதலைக்கூட்டணி ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து கொண்டு எமது கோரிக்கைகளை நிராகரித்துவிட்டது.

தமிழ் மக்களின் சார்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனைகளை முன்வைத்தது போன்றே, முஸ்லிம் மக்களின் சார்பாகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனைகளை முன்வைத்துள்ளது.

இந்நிலைமையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் உணர்ந்திருப்பார் என நினைக்கின்றேன். அவருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் தயாரிக்கப்பட்ட இடைக் கால நிர்வாக சபை குறித்த யோசனைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதற்கிடையில், வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக் கால நிர்வாக சபை ஒன்றை வழங்குவதற்கு இலங்கை அரசியல் யாப்பு தடையாக இருப்பதாக கூறப்படுவதால் அதில் சில திருத்தங்களை மேற்கொள்ள சகல தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழவும், சம உரிமையுடன் வாழவும் அரசு நியாயமான முறையில் தீர்வை வழங்க வேண்டும் என்றார். (உ-60,10)

## பொங்குதமிழ் நிகழ்வில் பங்கேற்குமாறு

# ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் அழைப்பு

(மட்டக்களப்பு)

தமிழர்களின் உரிமைக்குரலை உலகமெலாம் ஓங்கி ஒலிக்கச் செய்யும் வகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் பங்கேற்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருக்கும் தனித்தனியே கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம், கிழக்குப்... கடிதத்தில்,

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்கின்ற இந்த நாட்டின் நாயகன் என்ற வகையில் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற தாங்கள் பெரும் பாடுபட்டு வருகின்றீர்கள்.

எனினும், தென்னிலங்கை அரசியல் குழறுபடிகளால் சமாதான முன்னகர்வில் சில இடறல்களைத் தாங்கள் எதிர்கொண்டிருப்பதை நாங்கள் உணராமல் இல்லை.

தமிழர்களின் ஒருமித்த உரிமைக்குரலாக ஒலிக்கவுள்ள இந்தப் பொங்குதமிழ் நிகழ்வில் தாங்...

எமது இந்தப் பொங்குதமிழ் நிகழ்வானது சாமாதானத்தை எந்தவிதத்திலாவது குழப்ப வேண்டும் என்ற நோக்கம் கொண்டதல்ல.

தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு முடிவு தேடி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் தாங்களும் பங்கேற்று எம்மீது தங்களுக்குள்ள அக்கறையை நிரூபிக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொங்குதமிழ் நிகழ்வுக்கான அழைப்புக் கடிதங்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் நாடாளு...

அனைத்து மக்களும் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்தக் கொள்கை பொருந்தும். தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக அமைக்கப்பட்ட முதலாவது அமைப்பாக தமிழரசுக் கட்சி இருந்தமையினால் அந்த இயக்கத்தின் கொள்கைகளை அனைவரும் மதிக்க

நோக்கம். இவற்றையெல்லாம் அன்றைய தமிழரசுக்கட்சி ஏற்றுக் கொண்ட போதும், சில துரதிஷ்டவசமான சம்பவங்களால் அக்கட்சியின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் இயக்கம் ஒன்று உருவாகியது.

கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம், கிழக்குப் பல்கலைக்கழக பொங்கு தமிழ ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் எஸ். அருளின் கையொப்பத்துடன் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி அழைப்புக்

தமிழர்களின் ஒருமித்த உரிமைக்குரலாக ஒலிக்கவுள்ள இந்தப் பொங்குதமிழ் நிகழ்வில் தாங்களும் பங்கேற்று எமது அபிலாஷைகளை அங்கீகரிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட இது குறித்த கடிதத்தில்,

இதேவேளை, பொங்குதமிழ் நிகழ்வுக்கான அழைப்புக் கடிதங்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ)

# ஜனாதிபதியின் மீள் சத்தியப்பிரமாணம் நாட்டு மக்களை முட்டாள்களாக்கும் முயற்சி

## ஜனாதிபதி சட்டத்தரணி சிறிநாத்பெரேரா

(கொழும்பு)

ஜனாதிபதி குமாரதுங்க தனது 6 ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்த பின் 2000ஆம் ஆண்டு டிசம்பரில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்க முடியும் என்று முன்னாள் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி சிறிநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டு நவம்பரில் தான் மீண்டும் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்ததை ஜனாதிபதி அண்மையில் உறுதிப்படுத்தியிருந்தார். பதவிப்பிரமாணம் எடுக்க விரும்பும் எவரும் 2 தடவைகள் மட்டுமல்ல 10,15 தடவைகள் கூட தமது விருப்பப்படி சத்தியப்பிரமாணம் எடுக்கலாம். ஆனால் , உத்தியோக பூர்வமாக ஜனாதிபதி 1999 ஆம் ஆண்டிலேயே பதவிப்பிரமாணம் செய்ததால் அவரின் பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது.

டிசம்பர் 1999 இல் சத்தியப்பிரமாணம் எடுப்பதென அவர் தீர்மானம் செய்திருந்ததன் மூலம் பதவிக்காலமான ஆறு வருடத்தில் அப்போது மீதமாகவிருந்த மிகுதியை தானாக முன்வந்து கைவிட்டதாகவே கருதமுடியும்.

ஆனால், சட்டப்படி அவரின் 6 வருட பதவிக்காலம் அவர் முதன் முதலில் எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாணத் திகதியில் இருந்தே ஆரம்பமாகும். இதன்படி அவரின் பதவிக்காலம் 2005இல் முடிவடையும். ,

தான் ஜனாதிபதியாக பதவி வகிக்க உடல் ரீதியிலும் உள ரீதியிலும் பொருத்தமானவர் என மக்களுக்குக் காட்டவிரும்பினால் அதற்கு பல நடவடிக்கைகளைச் செய்திருக்கலாம். இதை விடுத்துத் தான் இதற்குத் தகுதியானவர் என்பதை பதவிப்பிரமாணம் எடுத்தே தெரிவிக்க வேண்டுமென ஜனாதிபதி நினைத்தது அவர் இந் நாட்டு மக்களை முட்டாள்களாகக் கருதியதையே காட்டுகின்றது என்று மேலும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அரசியல் யாப்பின் படி ஜனாதிபதியாக 2 தடவைகளே ஒருவர் பதவி வகிக்கலாம் என சட்டத்தரணி நிஸாந்த நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி 3ஆம் தடவை சத்தியப்பிரமாணம் செய்த செயல் சட்டவிரோதமானது. இது பதவியில் இருக்கும் சட்டரீதியான உரிமையை அவர் இழந்து விட்டதையும் தற்போது அவரின் பதவி வெற்றிடமாக இருப்பதை யுமே காட்டுகின்றது என்றார். (உ-6)

## நெற்பயிர் அழிவடையும்நிலை

(ஊர்காவற்றுறை)

உரிய காலத்தில் மழை பெய்யாமையால், அனலைதீவுப் பகுதியில் 80 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, விவசாயிகள் சிலர் நெல் வயல்களுக்கு கிணற்றில் இருந்து நீர் பாய்ச்சுவதையும் அவதானிக்க முடிகின்றது.(உ-75)

## அடிக்கடி மின் தடை

(கோப்பாய்)

கடந்த சில நாட்களாகக் கோப்பாய் மத்திப் பகுதியில் இரவு வேளைகளில் பல தடவைகள் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாகப் பாவனையாளர்கள் தரப்பில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால்,பாடசாலை மாணவர்களே பெரிதும் இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர். (தி-79)

## இன்று ஒரு தகவல்

# சாலை விபத்துகள்

அமெரிக்காவில் ஒரு சாலையில் இரண்டு கார்கள் எதிரும் புதிருமாக படு வேகத்தில் வந்துகொண்டிருந்ததாம்! இன்னும் சிறிது நேரத்தில் அவை இரண்டும் நேருக்கு நேர் மோதிக் கொள்ளப்போகின்றன. இது தெரியாமல் அந்தக் காரைச் செலுத்தும் இருவரும் 70 மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கின்றனர்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள் அந்த விபத்து நேர்ந்து விட்டது. இரண்டு கார்களும் நேருக்கு நேர் பயங்கரமாக மோதிக் கொண்டன. சரி... அந்த இரண்டு சாரதிகளுக்கும் என்ன ஆகியிருக்கும் என்று நினைக்கின்றீர்கள். லேசான காயம் தான் தப்பித்துக்கொண்டனர்.

அது எப்படி சார் முடியும்? 70 மைல் வேகத்தில் வரும் இரண்டு கார் எதிரும் புதிருமாக மோதுகின்றன. அதை செலுத்திக்கொண்டு வருபவர்கள் அதிக காயம் இல்லாமல் தப்பித்துக்கொள்கின்றனர் என்றால் அது எப்படி? அவர்களைக் காப்பாற்றியது காற்றுத் தலையணைகள் தான். அது என்ன காற்றுத் தலையணை?

காரில் உட்கார்ந்திருப்பவர்களுக்கும் டாஷ் போர்ட்டுக்கும் இடையில் இதுபோல் காற்றுத் தலையணைகளைப் பொருத்தி விடுவார்கள். கார் எங்காவது மோதிக்கொண்டால் உடனே இவைகள் உப்பிக்கொள்ளும். அதனால் நெஞ்சில் அடி படாது. ஸ்டியரிங் வந்து குத்தாது. எல்லாவற்றையும் நடுவில் உள்ள இந்தத் தலையணை வந்து சமாளித்துக்கொள்ளும்.

இப்போது புதிதாகத் தயாராகும் கார்களில் இதுபோன்ற தலையணைகளை வைத்து விற்கின்றனராம். "தலையணை" என்றதும் அது நாம் தூங்குவதற்காக என்று நினைத்து விடக்கூடாது. நாம் தூங்கினால் நம்மைக் காப்பாற்றுவதற்காக இந்தத் தலையணை. ஏனென்றால் பெரும்பாலான சாலை விபத்துகளுக்குக் காரணம் காரை ஓட்டுபவர்கள் தூங்குவது தான் என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

குடித்துவிட்டு கார் ஓட்டுவதனாலும் நிறைய விபத்துகள் நடைபெறுமாம். அதனால் இப்போது வெளியாகும் கார்களில் ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள். ஒருவர் குடித்துவிட்டு கார் ஓடுவதற்காக சீற்றில் அமர்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். சாவியைத் திருப்புகிறார். கார் ஸ்டார்ட் பண்ணாது இவர் குடித்திருக்கின்றார் என்பதை அது புரிந்து கொள்ளும்.

ஆமாம்! மூச்சில் சாராய நெடி இருந்தால் ஸ்டார்ட் ஆகாத கார்கள் இப்போது தயாராகின்றதாம். அதுமட்டுமல்ல அதில் ஓர் வொய்ஸ் சிந்தசைசர் இருக்கும். அது பேசும்."நீ குடித்திருக்கின்றாய் அதனால் அரை மணி நேரம் கழித்துத்தான் நான் கிளம்புவேன்" என்று கூறிவிட்டு இருக்கும்.

நவீன காரில் இன்னுமோர் வசதியும் வரப்போகின்றது. அது என்னவென்றால் இப்போது எதிரில் ஓர் வாகனம் வந்து கொண்டிருக்கின்றது. உடனே இந்தக் கார் தானாகவே பிரேக்போடும். சாரதி போடுவார் என்று எதிர்பார்க்காது. ஒரு மின்னியல் உபகரணம் மூலமாக இது நடைபெறுகின்றது. கொலிஷன் டிடெக்ஷன் எனும் ரேடார் முறைகளைக் கொண்டு எதிரில் அபாய எல்லைக்குள் இன்னுமோர் வாகனம் வந்து விட்டால் அதைக் கண்டுபிடித்து இது தானாக பிரேக் போட்டுவிடும்.

அமெரிக்காவில் சாலை விபத்தில் இறந்து போன 5 ஆயிரம் பேரில் அவர்கள் எதனால் இறந்தார்கள் என்று ஆராய்ந்து பார்த்தனராம். அதில் தூங்கிப் போனதால் இறந்தவர்கள் 10 ஆயிரம் பேர் என்று தெரியவந்ததாம். சிலருக்கு தூக்கமின்மை என்பது ஒரு நோய் . அதற்கு "ஸ்லீப் அப் நோயா" என்று பெயர்.

தங்களுக்கு இப்படி ஒரு நோய் இருப்பதே தெரிவதில்லை. இவர்கள் இரவில் பலமுறை முழிக்குக்கொள்வார்கள்

# மேன்மைத்துவம் மிகு சேவைகளை மக்கள் வங்கி வழங்கி வருகின்றது

## பிரதிப் பொதுமுகாமையாளர் ஹமகே

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி கிளிநொச்சி, சாவகச்சேரி மற்றும் நெல்லியடிக் கிளைகள் விரைவில் கணனி மயப்படுத்தப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வந்திருந்த மக்கள் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் (கிளைகள்) சுசிரிபாலா ஹமகே நேற்றைய தினம் செய்தியாளர்களுடன் உரையாடும்போது இத் தகவலை வெளியிட்டார்.

இச்சந்திப்பின்போது மக்கள் வங்கியின் வட வலய நிறைவேற்று அதிகாரி எஸ்.இளம்பிறைநாதன், பிராந்திய முகாமையாளர் எம்.கே. சிவபாதவிருதயர் ஆகியோரும் உடனிருந்தனர்.

பிரதிப் பொதுமுகாமையாளர் (கிளைகள்) சுசிரிபாலா ஹமகே தொடர்ந்தும் கருத்துக் கூறும்பொழுது,

வட பிரதேசத்தில் இயங்குகின்ற மக்கள் வங்கிகளில் வாடிக்கையாளர்கள் கூடுதலான நேரம் காத்திருப்பதைத் தவிர்க்கும் வகையில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை விரைந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்வுள்ளன.

இந்த வகையில், மக்கள் வங்கியின் பணிப்பாளர்களுக்கு வேண்டிய நவீனத்துவ பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. மக்கள் வங்கி நாட்டில் முன்னணி வங்கியாக இருப்பதால் இதன் சேவைகளை மேன்மைத்துவம் மிக்கதாக வழங்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இவர் தனது யாழ். விஜயத்தின் போது கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ். பிரதான வீதி, ஸ்ரான்லி வீதி, கன்னாதிட்டி ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளுக்கும் விஜயம் செய்திருந்தார். (உ-16)

# இலங்கை மீதான பார்வை-2004

# இளைஞர் சமாதான மாநாடு

## சிங்கப்பூரில் நடைபெறும்

(கொழும்புத்துறை)

முரண்பாட்டைத் தீர்ப்பதில் இளைஞர் சமுதாயத்தின் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கிலான "இலங்கை மீதான பார்வை- 2004" இளைஞர் சமாதான மாநாடு இவ்வருடம் சிங்கப்பூரில் இடம் பெறவுள்ளது.

அடுத்த மாத நடுப்பகுதியில் சிங்கப்பூரில் உள்ள தென்கிழக்காசியாவுக்கான ஐக்கிய உலகக் கல்லூரியில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் 16 வயது முதல் 19 வயது வரையான ஆண்,பெண் இருபாலாரும் பங்கேற்க முடியும்.

இதில் கலந்துகொள்ள விருப்பமுடைய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மேலதிக விபரங்களைப் பெற யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் "சமாதானத்திற்கான குரல்" அமைப்புடன் பாடசாலை நேரத்தில் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் விரிவுரைகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தமர்வுகள், குழுச்செயற்பாடுகள் என்பன பல்வேறு நாடுகளின் வள ஆளணியினரின் நெறிப்படுத்தலில் இடம்பெறவுள்ளன. (உ-51)

## இராசிபலன்

**18 .01. 2004**

**(தை 4, ஞாயிற்றுக்கிழமை)**

| | |
|---|---|
| ஏகாதசி | முற்பகல் 11.51 வரை |
| அனுசம் | பிற்பகல் 1.50 வரை |
| இராகுகாலம் | 5.05-6.35 மணிவரை |
| சுபநேரம் | 9.35-11.05 மணிவரை |

ஏகாதசி விரதம்

**மேடம்**

எடுத்த காரியம் தாமதமாகும், போசன சுகம், திடீர் நன்மை, நிலை மாற்றம்.

**இடபம்**

களஸ்திர நன்மை, விருந்துபசாரம், பிரயாணசுகம், கலந்துரையாடல்.

**மிதுனம்**

தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், பகைவர் நேசம், பெருமையடைதல்.

**கடகம்**

வியாபாரசிந்தை, முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம், உடல் சோர்வு,

### யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு

# 1.2 மில்லியன் பெறுமதியான

# இயந்திர சாதனங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பயன்பாட்டுக்கென 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்கள் மூன்றாம் நிலைக் கல்வி யமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரி அதிபர் ந.யோகராஜனிடம் மூன்றாம் நிலைக் கல்வியமைச்சர் கபீர் ஹாசிம் இயந்திர சாதனங்களைக் கையளித்தார்.

சி.டி.125 மோட்டார் சைக்கிள், குளிரூட்டிகள் உட்பட 25 வகையான இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, கடந்த 3 ஆம் திகதி மூன்றாம் நிலைக் கல்வியமைச்சினால் 3 மில்லியன் ரூபா பெறுமதியான

... என்று பெயர்.

தங்களுக்கு இப்படி ஒரு நோய் இருப்பதே தெரிவதில்லை. இவர்கள் இரவில் பலமுறை முழித்துக்கொள்வார்கள். ஆனால் அது இவர்களுக்குத் தெரியாது. பக்கத்தில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும். அடிக்கடி சுவாசம் தடைப்படும். சில சமயம் இது நீடித்தால் உடனே இலேசான ஒரு மூச்சுத் திணறல், சத்தமாக ஒரு பெருமூச்சு, விட்டுவிட்டு மீண்டும் குறட்டைவிட ஆரம்பித்துவிடுவார்கள்.

இது அனிச்சையாக நடப்பதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு இது தெரியாது. இந்த நோய்க்கு மருத்துவம் என்னவென்றால் அதற்கென்று உள்ள முகமூடியைப் போட்டுக்கொண்டு தூங்கினால் இரவுமுழுவதும் ஒரு சீரான அழுத்தத்துடன் அவர்களுக்கு காற்று கிடைக்கும். அதனால் அவர்கள் பகலில் தூங்கி வழியமாட்டார்கள்.

எதிர்காலத்தில் இன்னும் சில அதிசயங்கள் நடக்கப் போகின்றது. சாட்டிலைட் சிக்னல்களைக் கொண்டு தானாகவே இயங்கி வீடு வந்து சேரக்கூடிய கார்கள் வரப்போகின்றது. அதெல்லாம் வரும்வரை வண்டியை நாம்தான் ஓட்ட வேண்டும். நமது ஊரைப் பொறுத்தவரை குடித்துவிட்டு ஓட்டுவதனால் நடக்கும் விபத்துக்கள் அதிகம்தான்.

ஒரு கார் மரத்தில் மோதி விபத்து நடந்துவிட்டது. காரினுள் இருந்தவர்களுக்குப் பலமான அடி. எல்லோரும் போதையில் இருந்தார்கள். ஒரு பொலிஸ் அதிகாரி அங்கே வந்தார். விசாரணை செய்தார். “விபத்து நடந்தபோது காரை ஓட்டிக்கொண்டு வந்தவர் யார்?” என்று கேட்டார். “யாரும் இல்லை! ஏனென்றால் அப்போது நாங்கள் எல்லோரும் உள்ளே இருந்தோம்” என்றான் உள்ளே இருந்த ஒரு ஆள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

**வியாபாரசிந்தை, முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம், உடல் சோர்வு.**

**சிங்கம்**

**எடுத்த கருமம் தாமதமாகும், சிந்தனை மிகுதி, பெரியோர் ஆதரவு, ரோகநிலை.**

**கன்னி**

**சகோதரர் உதவி, கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, நல்ல செய்தி.**

**துலாம்**

**விதண்டாவாதம், தொழில் சிந்தை, பணவிரயம், அமைதிக்குறைவு.**

**விருச்சிகம்**

**உறவினர் சந்திப்பு, பிரயாணம், விருந்து பசாரம், காரிய அனுகூலம்**

**தனுசு**

**காரிய அலைச்சல், கௌரவக்குறைவு, தனவிரயம், நித்திரைக்குறைவு.**

**மகரம்**

**எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ சிந்தை, போசன நன்மை, குடும்பசுகம்.**

**கும்பம்**

**தொழிலில் ஆர்வம், பிறர் உதவி, நல்ல நிகழ்வு, முயற்சி கைகூடும்.**

**மீனம்**

**புதிய சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி தாமதம், ரோக பயம்**

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

இதேவேளை, கடந்த 3 ஆம் திகதி மூன்றாம் நிலைக் கல்வியமைச்சினால் 3 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்தன. இத்தளபாடங்கள் தற்போது வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 59வருடங்களின் பின்னர் முதன்முறையாக பெருமளவான உபகரணசாதனங்களும் நிதியுதவிகளும் கிடைக்கப்பெற்று வருவதாக கல்லூரி அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

இதேவேளை, தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்திக்கு 2 மில்லியன் ரூபா நிதியுதவியை இம்மாத இறுதிக்குள் வழங்குவதற்கு கொரிய நாட்டு அரசாங்கம் முன்வந்துள்ளது. (த-7)

## சப்பிரகமுவ பல்கலை மாணவர் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

சப்பிரகமுவ பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களின் போராட்டம் இன்று 94 நாட்களாக தொடர்கிறது.

பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் சங்கம் ஆறு கோரிக்கைளை முன்வைத்து பரீட்சைகளையும் புறக்கணித்து வருகிறது.

போஷாக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் உட்பட மேலும் பல கற்கை நெறிகளை 4 ஆண்டு பட்டக் கற்கை நெறிகளாக மாற்றக்கோரியே மேற்படி பீட மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆனால், இதுவரை மாணவர்களின் கோரிக்கைகள் குறித்து பல்கலைக்கழக உயர் பீடமோ அன்றி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவோ எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி-60)

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். -குறள்

வலம்புரி

## மதக்கலவரம் வெடிக்கும் அபாயம் தெரிகிறது

தென்னிலங்கையில் இப்போது கிறிஸ்தவ தேவாலயங்களைத் தாக்குகின்ற சம்பவங்கள் பரவலாக நடந்துவருகின்றன. பௌத்தமதவாதிகளே தேவாலயங்கள் மீதான தாக்குதல்களுக்கு காரணம் என சந்தேகிக்கப்படும் நிலையில் பௌத்த - கிறிஸ்தவ மதக்கலவரம் தென்னிலங்கையில் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளமை உணரப்பட்டுள்ளது.

சோமதேரரின் மறைவோடு கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக ஏழுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதுவிடயத்தில் பொலிஸார் பாராமுகம் காட்டி வருவதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

பல்லின மக்கள் வாழுகின்ற இலங்கையில், ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின் அது இன, மத, மொழிகளால் ஏற்படவேண்டும். குறிப்பாக மக்களிடையேயான ஒற்றுமைக்கு அடித்தளமாக விளங்குவது மதங்களேயாகும்.

எல்லா மதங்களையும் மதிக்கின்ற பக்குவம் ஏற்படுமாயின், மக்களிடையே ஒற்றுமை நிலவும். இத்தகைய நிலைமை உருவாக வேண்டுமாயின் அரசாட்சியில் இருந்து மத ஆதிக்கம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். பௌத்தமதமே ஆட்சி மதமாகக் கருதப்படுமாயின் மதக்கலவரம் வெடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

கோடிக் கணக்கான மக்கள் வாழுகின்ற இந்தியாவில் எல்லா மதங்களும் மதிக்கப்படுகின்றன. ஆட்சிப்பீடங்களில் மதம் என்ற பேச்சுக்கே இடம் கொடுக்கப்படவில்லை. ஆனால் சிறிய நாடான இலங்கையில் பௌத்த மதத்திற்கு அரசு வழங்குகின்ற அந்தஸ்து அளவு கடந்துவிட்டது. பௌத்த பீடங்கள் கீறிய கோட்டைத் தாண்ட முடியாமல் சிங்கள ஆட்சியாளர்கள் இருந்தமையினாலேயே இன்று நாடு குட்டிச்சுவராகிப் போயுள்ளது.

இந்நிலைமை மேலும்மேலும் தொடராமல் இருக்க வேண்டுமாயின் அரசாட்சியில் மத ஆதிக்கம் இல்லாதிருக்க வேண்டும். அதேவேளை இலங்கையில் புற்றீசல் போலத் தோன்றும் கிறிஸ்தவ அமைப்புகள் மதமாற்றும் தங்கள் நடவடிக்கைகளை முற்றாகக் கைவிட்டு ஏனைய மதங்களை மதிக்கின்ற பக்குவத்தைப் பெறவேண்டும்.

மேலைத்தேய நாடுகளில் தனவந்தர்களின் கூட்டுச் சேர்க்கையாகத் திடீர் திடீர் எனத் தோற்றம் பெறும் புதிய கிறிஸ்தவ அமைப்புகள் தென் கிழக்காசிய நாடுகளில் மதமாற்றும் நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

அதனொரு கட்டமாகவே அவ்வமைப்புக்கள் இலங்கைக்குள்ளும் ஊடுருவி உள்ளன. பணத்திற்கு விலைபோபவர்கள் அந்த அமைப்புகளின் பிரசாரக் கூலிகளாக, வீடுவீடாகச் சென்று மக்க

# இறை பற்றோடு செயற்பட்டால் இலகுவில் வெற்றி காணலாம்

புத்தாண்டின் புதுப் பொலிவில் மிளிர்கின்றவேளையிலே எம் செயல்கள் எல்லாம் ஞானம் நிறைந்ததாக அமைய வேண்டும். அப்போதுதான் எம் அறிவார்ந்த செயல்கள் பயன்மிக்கனவாக அமையும். இதனையே சீராக் நூலின் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஞானத்தின் கருவூலங்களில் அறிவார்ந்த பொன்மொழிகள் உண்டு; பாவிகளுக்கு இறைபற்று அருவருப்பைத் தரும்" (சீராக் 1:25) இறை பற்றில்லாமல் நாம் செய்யும் செயல்கள் இலகுவில் வெற்றியைத்தரா. "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே உள்ளத்தை இன்புறுத்துகிறது; மகிழ்வையும் அக்களிப்பையும், நீடிய ஆயுளையும் வழங்குகின்றது. (சீராக் 1:11) எனவே இறைவனில் நம்பிக்கை வைத்து எம்வாழ்வுப் பயணத்தைத் தொடர்வோம்.



## மனமாற்றம் பெறவேண்டும்

இயேசு வளர, வளர ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும்-மனிதருக்கும் உகந்தவாரய் வாழ்ந்து வந்தார். பாருங்கள் எவ்வளவு பண்பும் பணிவும் உள்ளவராக இறைவனின் திருமகன் வாழ்ந்தார் என்பதை இன்று சிறியோர் பெரியோரைக் கனம் பண்ணும், மதிப்புக் கொடுக்கும் நிலைகள் கால மாற்றத்தோடு அருகிச் செல்வதைக் கண்டு மனம் வேதனை அடைகின்றது. ஒழுக்க வாழ்வுகள் சீரழிந்து கொண்டு போவதைக் காணும்போதும், வன்முறைச் செயற்பாடுகள் பதில் கொடுக்கும்போதும் வாழ்வு வெதுப்படைகின்றது. எங்கே போய் எம்மினத்தின் தலைவிதி முடியுமோ என்ற கலக்கம் பெரியோர்களை வாட்டி வதைக்கின்றது. இதற்கு எல்லாம் காரணம் கடவுளை மறந்த நிலைதான். களியாட்டங்கள் கடவுளின் இடத்தை மறைத்துக் கொண்டிருக்கின்றன. தற்பெருமையானது மனித கண்களை நிறைத்து அகக் கண்களை மூடவைத்துள்ளன. எனவே மனமாற்றமே இதற்கான மருந்தாகும். பிறருக்குத் தீங்கு நினையாமையே எம்மைக் கடவுள்பால் ஈர்த்துச் செல்லும் .

## ஆன்மீக முக்கியத்துவம்

ஞானத்திலும் அறிவிலும்விடப் பெரியதாகப் பணம் மதிக்கப்படுகின்றது. ஆன்மீகம் அறியாதவர்கள் எழுப்பும் கூக்குரல் என்று கருதப்படுகின்றது. பணத்தாலே எதையும் வாங்கிட நினைக்கும் உலகம். மனித மாண்பை வளர்க்க பின்னிற்கின்றது. மானிடத்தின் பரிபூரண விடுதலைக்குப் பலியாவதே வாழ்வின் உன்னத இலட்சியமாகும். மானிடப் பெருமை, தற்கால மதிப்பு, உலக மேன்மை எல்லாம் தேவனின் நித்திய மகிமைக்கு முன்பு வீண் செருக்கும் மதியீனமும் ஆகும் என்பதை மனிதன் உணராமல் இருக்கிறான். ஆண்டவரை நோக்கி உன் கண்களை ஏறெடுத்துப்பார் அப்போது உன் வாழ்வில் மாற்றமுண்டாகும், அன்பு பெருகும், அறம் வளரும், மறம்விலகும் உனது பணிக்காக உலகம் ஏங்கும்

## இறைதுணை வேண்டல்

காலங்காலமாகப் பெருகி வந்த பாவக் கறையின் இருளில் இருந்து நாம் விலகாமல் இறைவனின் இரக்கப் பெருக்காம் என்ற ஒளியைப் பெற்றுக்கொள்ளாமல் உலகில் செல்வங்களைப் பெற்று அவற்றை அனுபவிப்

## பரமபிதா காட்டிய பாதை

பதிலே எம் காலத்தைச் செலவிடுவோமானால் நாம் பரிதாபத்திற்குரியவர்கள். எம் உழைப்பின் பயன்கள் வீணானவை. மாறாக இறையன்பை இறை வெளிப்பாட்டை, இறை வழிநடத்துதலை நாம் பெற்று வாழ முன்னிற்க வேண்டும் "உமது பேரன்பை நான் வைகறையில் கண்டடையச் செய்யும்...நான் நடக்க வேண்டிய அந்த வழியை எனக்குக் காட் நோக்கி என் உள்ளத் 143:18) என்று தாவீது துணையை நாள்தோறும் வேண்டி எமகடமைகளைச் செய்ய முற்படுவோமானால் எம் வாழ்வில் மாறுதல், முன்னேற்றம் எல்லாம் இறைவனால் வந்து சேரும். எனவே புத்தாண்டின் தொடக்கத்திலே இறை துணைக்கொண்டு நாள்தோறும் அவனருள் வேண்டி எம் பணி தொடர்வோம். □

அன்ரனி பீற்றர்

---

குருநாகல் மாணவர்கள்

## யாழ்.பொது நூலகத்திற்கு நூல்கள் பல அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநாகல் மாணவர்கள், யாழ்.பொது நூலகத்திற்கு 45 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

குருநாகல் கிறிஸ்தவ வட்டத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வந்த சுமார் 50 மாணவர்கள் நேற்றைய தினம் யாழ்.பொது நூலகத்தில் வைத்து யாழ். மாநகர ஆணையாளரிடம் இந்த நூல்களைக் கையளித்தனர்.

இந் நிகழ்வில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, கியூடெக் இணைப்பாளர் சி.ஜி.ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய யாழ்.ஆயர்,

பெரியவர்கள் விட்ட தவறை சிறியவர்களான இந்த மாணவர்கள் திருத்த முற்பட்டுள்ளமையை இந்த நூல்கள் கைய

## சாவகச்சேரி அபிவிருத்தி ஆலோசனைக் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரின் அபிவிருத்திக்கு ஆலோசனை வழங்குவதற்கென குழுவொன்று தைபொங்கல் தினத்தன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் மு.செ.சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்பபணக் கூடடத்தில் சாவகச்சேரி நகரில் இருக்கும் பொது அமைபபுகளின் பிரதிநிதிகள் சுமார் 40 பேர் பங்குபற்றியிருந்தனர்.

யுத்தத்தினால் சேதமடைந்த மேற்படி நகரை திட்டமிடட வகையில் நகர மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்வதறகு வசதியாகவும், மக்களினால் தெரிவு செய்யப்பட்ட உளளூராட்சி சபை தற்போது இல்லாமல் இருப்பதனாலும் சபையின் அபிவிருத்திப் பணிகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் இச்சபை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆலோசனைச் சபைக்கு டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், எம.கே.ஜீவகதாஸ், பி.என்.சற்குணராஜா, கே.மோகனராஜலிங்கம், கே. இராஜரத்தினம், ஆர்.ஜெகநாதன், இ.ஜெயக்குமார்,திருமதி மகேஸ்வரி, செல்வி எஸ். நளாயினி

இலங்கைக்குள்ளும் ஊடுருவி உள்ளன. பணத்திற்கு விலைபோபவர்கள் அந்த அமைப்புகளின் பிரசாரக் கூலிகளாக, வீடுவீடாகச் சென்று மக்களுக்கு ஆசை காட்டி அவர்களை மதமாற்றம் செய்து விடுகின்றனர்.

அதுமட்டுமன்றி ஏனைய மத நம்பிக்கைகளைக் கீழ்த்தரமாகப் பேசுவதுடன், அந்த மதங்கள் சார்ந்த தெய்வங்களை சாத்தான்கள் என்றும் கூறிக்கொள்கின்றனர். இந்நிலைமை மிக மோசமானது மட்டுமன்றி, இத்தகையவர்களிடம் மனித நேயம் கொஞ்சமேனும் இல்லாதிருப்பதையும் அந் நடவடிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

இலங்கையில் ஏற்கனவே நிலைபெற்றுள்ள கத்தோலிக்கம், தென்னிந்தியத் திருச்சபை போன்ற குறிப்பிட்ட கிறிஸ்தவ சமயங்கள் பிற மதங்களையும் மதிக்கும் பண்பைக் கொண்டவை. அவை இறை நம்பிக்கை, இரக்கம், காருண்ணியம் என்பவற்றை மதித்து நடக்கின்றன. ஆனால் புதிதாகத் தோற்றம் பெறுகின்ற கிறிஸ்தவ சபைகளே மதமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நாட்டைக் குழப்புகின்றன.

இந்நிலைமை தென்னிலங்கையில் மட்டுமன்றி வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் ஏற்பட்டு வருகிறது. வறியவர்களின் ஏழ்மையை சாதகமாகக் கொண்டு மதமாற்றத்தில் ஈடுபடும் இவ்வமைப்புகள் தங்கள் பணிகளை இறைவன் பேரால் செய்து மக்களுக்கு உதவ வேண்டுமே தவிர, மதமாற்றத்தை நோக்காகக் கொண்டு உதவி வழங்குவதைக் கைவிடவேண்டும். இதற்கு மேலாக சைவாலயங்களைக் அண்மித்து தமது அமைப்புகளின் நிகழ்வுகளை நடத்துவதையும் மதம் மாற்றும் அமைப்புகள் கைவிடுவது பெரியதொரு கலவரத்தைத் தடுக்க உதவும்.

ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய யாழ்.ஆயர்,

பெரியவர்கள் விட்ட தவறை சிறியவர்களான இந்த மாணவர்கள் திருத்த முற்பட்டுள்ளமையை இந்த நூல்கள் கையளிப்பு உணர்த்துகின்றது.

இந்த மாணவர்கள் தமது முயற்சியால் சிறுகச் சிறுகச் சேகரித்த இந்தப் பணத்தைக் கொண்டு இவ்வளவு தொகைப் பெறுமதியுடைய நூல்களைக் கொள்வனவு செய்துள்ளனர். இதனை எமது யாழ். மாவட்ட மாணவர்களும் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த மாணவர் குழாம் நேற்றைய தினம் குருநாகல் திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-16)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனை

மக்கள் பொதுவாக வாழ்க்கையில் உள்ள குறைகளை எல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய், பிசாசு என்று கற்பித்துக் கொண்டு அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள்.

விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே, அதன் பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒன்றுமில்லை. பாராட்டுவதற்கும் ஒன்றுமில்லை.

**சுவாமி விவேகானந்தர்**

இவ் ஆலோசனைச் சபைக்கு டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், எம.கே.ஜீவகதாஸ், பி.என்.சற்குணராஜா, கே.மோகனராஜலிங்கம், கே. இராஜரத்தினம், ஆர்.ஜெகநாதன், இ.ஜெயக்குமார்,திருமதி மகேஸ்வரி, செல்வி எஸ். நளாயினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என சாவகச்சேரி நகரசபையின செயலாளர் தெரிவித்தார். (உ-16)

## கொழும்பு பிரதம நீதிவானிடம் நீதிச் சேவை ஆணைக்குழு வினவும்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவின் வழக்கு விசாரணைகளில் இருந்து விலகியமைக்கான காரணங்களை கொழும்பு பிரதம நீதவான் பி.பி. பொயாகொடவிடமும் வினாவுவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழு தயாராகிவருகின்றது.

அண்மையில் நீதிமன்றத்தில் வைத்து கொலை செய்யப்பட்ட தம்மிக்க அமரசிங்கவுக்கு போலிக்கடவுச் சீட்டு ஒன்றைத் தயாரிக்க உதவினார் என்று திலஙக சுமதிபால மீது குற்றம்சாட்டப்பட்டு இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 13 ஆம் திகதி கொழும்பு நீதிமன்றில் இடம்பெற்ற சுமதிபால மீதான வழக்கு விசாரணைகளில் இருந்து தான் விலகிக் கொள்வதாக நீதவான் அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (தி-60)

## பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் கூட்டம்

(மட்டக்களப்பு)

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான மிக முக்கிய கூட்டம் ஒன்று நேற்று அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.அருள் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் மட்டு- அமபாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் அரசியல்துறை பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில், எழுச்சிப் பேரணிக்கான மக்களைத் திரட்டுதல், அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் ஆகியன குறித்து ஆராயப்பட்டது. (உ)

## ஜனாதிபதியின்...

மொத்தம் 12 வருடங்கள் அதாவது நவம்பர் 2006 வரை பதவியில் இருப்பார். இதுபற்றி ஊடகத்துறை நண்பர்களிடம் அலைவதற்கும் புரளியைக் கிளப்புவதற்கும் பதிலாக ஐ.தே.மு.மேல் நீதிமன்றத் திடம் சென்று விளக்கம் கேட்கலாம் என்றும் சரத் அமுனுகம கூறினார்.

இச்செய்தியாளர் மகாநாட்டில் வைத்து ஜனாதிபதியின் இரகசியப் பதவிப்பிரமாணம் செய்த திகதியை அறிவிக்குமாறு செய்தியாளர்கள் சுதந்திரக்கட்சியின் பேச்சாளர் மங்கள சமரவீரவிடம் வற்புறுத்தினர். அதற்கு பதிலளித்த சமரவீர, திகதி அவ்வளவு பெரிய விவகாரம் அல்ல என்றார்.

அது நாட்டு மக்களுக்கு முக்கிய மானது என செய்தியாளர்கள் வற்புறுத்தினர். இறுதியாக குறித்த திகதியை வழங்க சமரவீர சம்மதித்தார். இத்தகைய இரகசிய நிகழ்வு இடம்பெற்ற காலத்தில் பொ.ஐ.முவின் பேச்சாளராக சமரவீர விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

## மத வன்முறை..

பண ஆசைகாட்டி தமது சமயத்தில் இணைத்துவருகின்றதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் இக் குற்றச்சாட்டுக்கு கிறிஸ்தவக் குழுக்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன. கிறிஸ்தவ வழிபாட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன. (த-6)

## வாகனம்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவின் வரிப்பத்தான்சேனை பாலத்தடியில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற இச்சம்பவத்தினால் பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.(த)

## காலாவதியான மருந்துகள் பிடிபட்டது

(கொழும்பு)

காலாவதியான பெருந்தொகை மருந்துப் பொருட்களுக்கு போலியான முத்திரை பொறித்து மீண்டும் அவற்றை விற்பனைக்கு விட்ட மருந்து விற்பனை நிலையம் ஒன்றை கடவத்தை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் உள்ள வீடு ஒன்றை சுற்றி வளைத்து சோதனையிட்ட போது அவ் வீட்டினுள் காலாவதியான மருந்துப் பொருட்கள் ஏராளமாக இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துப் பொருட்களை விற்பனைக்காக ஏற்றிக் கொண்டு சென்ற 5லொறிகளையும் கடவத்தைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (வ)

## யுத்த விமான...

முதற் கட்ட வரையும் தயாரிக்கப் பட்டுள்ளது.

இவ்வரைபின் பிரகாரம் பாதுகாப்புச் சார்ந்த இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்க இந்தியா உடன்பட்டிருப்பதாகவும், அதன் அடிப்படையிலேயே ஆயுத உபகரணங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் இணையத் தளச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்து சமுத்திரக் கடற்பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் பலாலி விமான நிலையப் புனரமைப்பு என்பவற்றுக்கும் இந்திய அரசு உத்தரவாதம் அளித்துள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இலங்கை இந்திய கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கைக்கு அமைவாக புலனாய்வுத் தகவல் பரிமாற்ற வலைப்பின்னல் ஒன்றை ஏற்படுத்தவும், இலங்கைக்கு புலனாய்வுச் சேவை மற்றும் பயிற்சியை வழங்கவும் இந்தியா முன்வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-த)

## பொதுச் சுகாதார பரிசோதகர் 10பேர் நியமனம்

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுவதற்கென பத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான நியமனக் கடிதங்கள் திருகோணமலையில் உள்ள வடக்குக் கிழக்கு மாகாண சபை அலுவலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட பத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களில் மூவர் யாழ்.மாவட்டத்திற்கும், மூவர் மன்னார் மாவட்டத்திற்கும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு தலா இருவர் வீதமும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பத்துப் பேரும் நாளை திங்கட்கிழமை முதல் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்பர் என்று நிர்வாகப் பணிப்பாளர் இராசா இரவீந்திரன் தெரிவித்துள்ளார். (ம)

## புலிகளுடன்...

சாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களைச் செய்திருந்தாலும் அப்போது அமுல்படுத்த முடியாமல் போயுள்ளது.

ஆனால் தற்போதைய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்து அதில் கையொப்பமிட்டதுமல்லாது, அதனைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது.இதனால் சமாதானம் தொடர்பான நம்பிக்கை மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது. மக்கள் கொண்டுள்ள அந்த நம்பிக்கையை பலமடையச் செய்து சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தயாராகிவருகின்றது.

அரசாங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகளின் மூலம் சமாதான முயற்சிகளுக்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன்.மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.(ம)

## மாணவருக்கான இலவச சீருடை ஜன. 20க்கு முன்னர் விநியோகம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடை விநியோகம் இம் மாதம் 20ம் திகதி செவ்வாய்கிழமைக்கு முன்னர் இடம் பெறுமென பாடசாலைகள் அபிவிருத்தி அமைச்சர் சுசனில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இலவசச் சீருடை விநியோகத்தில் இடம்பெற்ற முறைகேடுகளைத் தவிர்க்கும் முகமாக இவ் வருடம் அவ்வப் பகுதி பிரதேச செயலர்களினதும், கிராமசேவையாளர்களினதும் பங்களிப்புடன் பாடசாலை அதிபர்களினால் உறுதிப் படுத்தப்பட்டு ஏற்கனவே கிராம சேவையாளர்களிடம் வழங்கப்பட்ட பத்திரங்களின் அடிப்படையில் கூட்டுறவு விற்பனை நிலையங்கள்டாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க 2004ம் ஆண்டிற்கென இரண்டு கோடி 51 இலட்சம் பாடநூல்களை அச்சிடுவதற்கு அரசாங்கம் 600 கோடி ரூபாவைச் செலவு செய்திருப்பதாக பாட நூல் வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் எஸ்.எல் குணவர்த்தனா தெரிவித்துள்ளார். (ம)

## ஒஸ்மானியாவில் சமாதான சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் ஏற்பாட்டில் இன்று சமாதான சிரமதானம் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் மற்றும் தமிழ் பொது மக்கள் இணைந்து காலை 9.00 மணிமுதல் மேற்கொள்ளவுள்ள இந்த சிரமதானம் முஸ்லிம் மக்கள் குழுவின் தலைவர் மௌலவி சுபியான், கியூடெக் இணைப்பாளர் சி.ஜி.ஜெயக்குமார் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெறவுள்ளது. (உ-16)

வாழ்த்துகின்றோம்
யாழ்.குடாநாட்டில்
25 ஆண்டுகளை பூர்த்தி செய்து
வெள்ளி விழாக் காணும்
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தை
வாழ்த்துகின்றோம்
ராஜவேல் புடவையகம்
நவீன சந்தை
சாவகச்சேரி
ஆகாஸ் தையல் நிலையம்
கோட்டடி
கண்டிவீதி
சாவகச்சேரி
(ச-7184)

31-ம் நாள் நினைவஞ்சலி
அமரர் சதாசிவம் சின்னையா
(அதிபர் சின்னையா இரும்புத் தொழிலகம்)
ஆசானாய் வீற்றிருந்து
அருந்தொழில் கற்றுத் தந்து
அமரனடி சேர்ந்த ஐயன்

ITP
INFORMATION TECHNOLOGY PARK
Ministry of Rehabilitation, Resettlement & Refugees,
National Housing Secretariat Building,
Near Kachcheri, Kandy Road, Jaffna, Sri Lanka.
Phone 021-2223641, Director- 2223643
E-Mail:itp@sltnet.lk

## அமரனடி சேர்ந்த ஐயன் திருவடிக்கே சரணம்

19.12.2003 அன்று இறைபதமெய்திய அமரர் சதாசிவம் சின்னையா அவர்களின் திருவுருவப் படம் இன்று முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள சின்னையா இரும்புத் தொழிலகத்தில் அன்னாரின் மாணவரான சு. பரஞ்சோதி அவர்களால் திரை நீக்கம் செய்யப்படும்.

சு.பரஞ்சோதி

அம்மன் வீதி
திருநெல்வேலி கிழக்கு
திருநெல்வேலி

(சி-7186)



## மிக விரைவில்

உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்

# விவாத அரங்கு

# கருத்துச் சங்கமம்

மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்

✶ஆசிரியர்களா?
✶மாணவர்களா?
✶பெற்றோர்களா?

உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன



Phone:021-2223641, Director- 2223643

E-Mail:itp@sltnet.lk

தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் 2004ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரியில் 20-01-2004 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## எமது வளர்ச்சியில் மற்றொரு பரிணாமம்

மிகவிரைவில் - வடமராட்சி,தென்மராட்சி, வலிகாமம்,மற்றும் தீவகத்திலும் புதிய கிளைகள் ஆரம்பம்.

## Diploma Courses

| Courses | Duration | Fees |
|---|---|---|
| Diploma in MS-Office | 5 | 2800 |
| Diploma in Hardware Technology | 6 | 3200 |
| Diploma in Desktop Publishing | 5 | 2400 |
| Diploma in Computer Programming | 6 | 5500 |
| Diploma in Internet Technology | 5 | 4500 |

## Certificate Courses

| Courses | Duration | Fees |
|---|---|---|
| Ms-Word | 30 Hours | 1000 |
| Ms-Excel | 30 Hours | 1000 |
| Ms-Access | 30 Hours | 1000 |
| Pagemaker | 30 Hours | 1000 |
| CorelDraw | 30 Hours | 1000 |
| AutoCAD | 30 Hours | 1,000 |
| C/C++ | 40 Hours | 1800 |
| Visual Basic | 40 Hours | 1800 |
| Java | 40 Hours | 1800 |
| Internet & E-Mail | 40 Hours | 1800 |
| Hardware | 40 Hours | 1800 |
| Oracle | 40 Hours | 1800 |
| Webpage Design | 40 Hours | 1800 |
| HTML & J scripts | 40 Hours | 1800 |

Registration Fees for all the Courses is Rs.250/-only.

## On-line Course

Diploma in PC App. & Office Management

Duration - 3 Months , Course fee - 2750/-

விண்ணப்ப முடிவுத் திகதி 31-01-2004

வகுப்புக்கள் ஆரம்பம்
வார இறுதி- 01-02-04
வார நாள் - 02-02-04

Information: Director

**Centre for Information Technology**

For Further Details: Course Manager


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.